சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"


84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 45-ம் இலக்கம்

# மீண்டும் கம்யூனிஸ்தரின் இரட்டைவேஷம்

## நாஸ்திகரின் நடைமுறைக்கு ஓர் எடுத்துக்காட்டு

### தீபேத்தில்நடந்த சம்பவங்கள் அம்பலமாக்கும் உண்மை

[கொலை! அதை யார்செய்தாலும் எங்குஅது நிகழ்த்தப்பட்டாலும் கொலைகொலையாகவேயிருக்கும். இதுவே ஆஸ்திக உலகின் கொள்கை. ஆனல், நமது கம்யூனிஸ்த நண்பர்கள் இதற்கு எதிர் மாருன கொள்கையுடையவர்கள். கம்யூனிஸத்தின் தந்தையென அவர்கள் வழிபடும்ஸ்ராலினுக்காகவோ, மா-சே-துங்கின்ஆணையின் நிமித்தமோ நிகழ்ந்த ஓர் கொலையாக இருப்பின் அது படுகொலையென்று ஒப்புக்கொள்ள மறுப்பர். ஆனல், இரும்புத்திரை நாட்டிற்கு வெளியிலே அன்றேல் மூங்கில்திரை நாட்டுக்கு வெளியிலோ ஒருகொலை நடந்துவிட்டால் அதுபடுகொலை என்று ஓலமிடுவார்கள். சமீபத்திலே தாங்கள் செய்தகுற்றத்தைக் குற்றமென்று ஒப்புக்கொள்ளமறுக்கும் இந்த நாஸ்திகர்அதேகுற்றத்தை ஆஸ்திகர்செய்துவிட்டால் அதைக்கண்டிக்க முற்படுகின்றனர்.]




தமதுகுருநாதரான ஸ்ராலினேயோ, பெரியாவையோ, செருேவ் போன்றவர்களையோ, நமதுஇலங்கைக் கம்யூனிஸ்த தலைவர்கள் கண்டுபாவிப்பார்களா? என்று நாம் ஆச்சரியப்படுவது மிகையாகாது. இந்தக் கம்யூனிஸ்த தோழர்கள் 1956-ம் ஆண்டு தற்போதைய சோவியற்பிரதமர் திரு. குருஷேவ்அவர்கள் சோவியற்யூனியன் இருபதாவது மகாநாட்டிலேகூறியதை மறந்துவிட்டார்களா? கம்யூனிஸ்த தந்தையாகிய திரு. ஸ்ராலின் தனது ஆளுகையின் 30வருடங்களிலும் ஆயிரக்கணக்கான படுபாதகமான அரசியற்கொலைகளைப் புரிந்துள்ளார், குற்றமற்றநேர்மையான நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்தர்களில்பலர் பொய்க்குற்றச்சாட்டுகளின் நிமித்தம் பயங்கரமானவிதமாகத் தண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்என்று திரு. குருஷேவ் தனதுதலைவரைக் குற்றஞ்சாட்டியதை இவர்கள் மறந்துவிட்டார்கள்போலும். பலாத்காரமாகவும், கட்டாயமாகவும் சர்வாதிகார ஆதிக்கத்தின் கீழ் இரக்கமற்ற அரக்கத்தனமாய் எத்தனையோ படுகொலைகள் ஸ்ராலினின் ஆட்சியிலே நடந்தேறியதைத் திரு. குருஷேவ்தானே கண்டித்தபோதிலும் இவர்கள் வாழாவிருந்தனர். மேலும் இதே போன்ற கண்ணியமற்றநடத்தையினல் கம்யூனிஸ்தகட்சியின் திறமைவாய்ந்த அங்கத்தவர் பலரை இழக்கும்படிநேரிட்டது. **கோகியர், கூவர், பொஸ்ரீசிவ்,** போன்ற உறுப்பினர்பலரை கட்சிஇழந்தது. அந்நாட்களில் சோவியற்ருஷியாவிலே நிலவிய அடக்குமுறை ஆட்சியிலே நீதியற்றமுறையிலே நடைபெற்ற கொலைகளின்நிமித்தம் கம்யூனிஸ்தகட்சியே பல அங்கத்தினரை இழக்கநேரிட்டது. மேலதிகாரி ஒருவரால் தண்டிக்கப்படவேண்டியவர்களின் நாமாவலிகள் தயாரிக்கப்பட்டுச் சோவியற்பிரதமராய் இருந்தஸ்ராலினுக்கு அனுப்பிவைக்கப்படும். அவர் அதை அங்கிகரித்ததும் ஈவிரக்கமின்றித் தண்டனை நிறைவேறியது. 1937-ம், 1938-ம் ஆண்டுகளிலே இப்படியான ஆயிரமாயிரம் பேர்கள்அடங்கிய 383நாமாவலிகள் தயாரிக்கப்பட்டுத் திரு. ஸ்ராலினுக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அவற்றை அங்கிகரித்தார். இப்படிக் கொடுமையாகக்கேட்டுக் கேள்வியின்றிக் கொல்லப்பட்டவர்களில் போர்வீரர், தொழிலாளர், கட்சி அங்கத்தினர், இன்னும் இன்னேரன்ன பலதிறத்தினர் அந்த நாமாவலிகளில் அடங்கியிருந்தனர். இவையாவும் ஸ்ராலினுல் அங்கிகரிக்கப்பட்டவையாம்.

இப்படிப் படுபாதகமாக-அநீதியாக — அக்கிரமமாகத் தங்கள் சகோதரதோழர்கள் ஸ்ராலினின் சர்வாதிகாரத்திலே சித்திரவதை செய்யப்பட்டபோதிலும் சங்காரஞ்செய்யப்பட்டபோதும் அவர்களுக்காக எமது இலங்கைத் தோழர்கள் அனுதாபப்பட்டு ஒரு சொட்டுக்கண்ணீர் விட்டிருப்பார்களா? அல்லது தீபேத்துவாவோஸ், இந்தியாவில் கேரளம் முதலாம் இடங்களிலே கம்யூனிஸ்த அக்கிரமங்களுக்குமறுப்புத் தெரிவித்தார்களா? இந்த நிஷ்டூரங்களுக்கு எதிர்ப்புக்காட்டினுர்களா?

நாஸ்திக அதிகார பீடம் சொல்லுவதையெல்லாம் அப்படியே 'கபளீகரம்' செய்துகொண்டு அவர்களின் சுயரூபத்தைக் காணமுடியாது திண்டாடுபவர்களுக்கு —சமீபத்திலே தீபேத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஞாபகப்படுத்துகிறேம். சோவியற் ஆதிக்கபீடம் கையாண்ட அதே பயங்கர்முறைகளைப்பின்பற்றித் தீபேத்திலே கம்யூனிஸ்தர்கள் நடத்திய மனிதவேட்டையிலே— ஒருசாகியத்தினரை அடிப்படுத்த மேற்கொண்டமிருகத்தனமான தாக்குதலும், சித்திரவதைகளுமான அக்கிரமங்களையும்செய்வதிலே கைகூசாது, உள்ளம்உருகாது மிருகத்தனமாய் நடந்துகொண்டதையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேம்.

தலாய்லாமா கடந்தஆனிமாதம் 20-ந்திகதி பத்திரிகைகளுக்கு

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

---

பாப்பரசர் கூறுகின்ருர்

## அவர்கள் அன்னேயைத் துரத்திவிட்டனர்

ஒவ்வொருவருக்கும் சிலுவை உண்டு. அது பெரிதாகவும் இருக்கும். சிறிதாகவும் இருக்கும். பாப்பரசர் தமதுமார்பில் ஒரு பொற்சிலுவையைத் தாங்கியுள்ளார். மேற்றிராணிமார்களும் அவ்விதமே. மற்றையோர்கட்கும் சிலுவை உண்டு. ஆயின் அது வெளிப்படையாகத்தெரிவதில்லை. யேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையைச் சுமந்துகொண்டு கல்வாரி மலைக்குச் செல்கையில் தனிமையாகக் காணப்படவில்லை. அவரின் பக்கத்தில் மரியன்னை தமதுசிலுவையைச் சுமந்துசென்றதன் மூலம் அவருக்கு ஆறுதல்அளித்தார். தங்களைக் கிறீஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் புரொட்டஸ்தாந்தர்கள் செய்ததென்ன? அவர்கள் யேசுவைஏற்றுக்கொண்டு மரியாயைத் துரத்திவிட்டனர். தமதுஅன்னையைத் தள்ளிவிடுவதை எம்பெருமான் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்.

[பாப்பரசர் காஸ்தெல் காந்தல்போ மாளிகையிலே 10,000 யாத்திரிகர்களுக்கு நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து.]

---

### இலங்கையில் பாப்பரசரின் மருகர்

நம் பரிசுத்ததந்தை 23-ம்அருளப்ப பாப்பரசரின் மருகரான டக்றர் இன்வெனன்சி அவர்கள் இப்போது இலங்கையில் தங்கியிருக்கிருர். இவர் மிலான்நகரின் பிரபல வைத்தியஸ்தாபனம் ஒன்ருல் ஒருபுதியவைத்திய ஆராய்ச்சி நடத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளார். இலங்கையிலே தமது ஆராய்ச்சி முடிந்ததும் பம்பாய், றங்கூன், பாகிஸ்தான் முதலிய நாடுகளிலும் தமது ஆராய்ச்சி வேலையை முடித்துக்கொண்டு அடுத்தவருடம் ஆவணிமாதம் வரையில் தாயகம்திரும்புவார். டக்றர் இன்வெனன்சி அவர்கள் கொழும்பு, சகலஅர்ச்சியசிட்டர்கள் ஆலயத்தைத் தரிசித்தபோது, இலங்கைமக்களின் வேதவிசுவாசம்தம்மைக் கவர்ந்துவிட்டதாகவும், விசுவாசத்தில் இலங்கை சிறிய ஊர்துபதியேஎன்று எண்ணும்படி தோன்றுகின்றது என்றும்கூறினர்.

## யாதாவுக்குச் சூட்டிய

# மகத்தான பாமாலை

**"ஓ, தேவ அன்னையே! தெரிவுப்பரீட்சையில் சித்தியடைய எனக்குத் துணைச்செய்வீராஞல் நான் ஓர்நாள் உமக்கு மகிமையாக அலங்காரமான ஓர் கீதத்தை இயற்றுவேனென வாக்களிக்கிறேன்."**

ஒருநாள் அதிகம்துலாம்பரமான சூரியோதயவேளை வீட்டிலிருந்து வெளியிலே அடியெடுத்து வைக்கும் போது, "என்ன மங்கலகரமான உதய காலம்" என்று பிருன்ஸ் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். இந்தப்பாலியன் தனதுகரத்தில் பிரகாசமான புதியபென்னி நாணயம்ஒன்றை இறுகப்பற்றிப் பிடித்திருந்தான். அவன் வீட்டின்வெளிவாயிலிலே ஒரு கணவேளை தரித்துநின்று எதனையோ சிந்தித்துவிட்டு அதன்மேல் வீதியை நோக்கி ஓடிப்போஞன்.

அப்போது சடுதியாக ஓர்பெரிய பையன் சந்தியின்முடக்கால்வளைந்து அதிகம்வேகமாக வந்தான். அவ்வேளை வீதியைநோக்கி ஓடிப்போன வேகத்தில் பிருன்ஸ் அந்தப்பையனில்போய் மோதுண்டு கீழேவிழுந்து உருண்டு புரண்டு 'ஊவ்'என்று ஒலமிட்டான். உடனே பெரியபையன் கீழேகுனிந்து பிருன்ஸைத் தூக்கிநிறுத்தி "ஆ! இதற்காக நான் வருந்துகிறேன்," என்று உரத்துச்சொல்லித் "தம்பி, ஏதும்காயமா? இங்கேநில், நான் உன் மீதுள்ள புழுதியைத் துடைத்துவிடுகிறேன்"எனக்கூறிஞன்.

ஆஞல்,பிருன்ஸ் தான் காயமடைந்ததையிட்டோ அன்றேல் தனதுஉடைகளில் புழுதிபடிந்ததையிட்டோ பறுவாய்பண்ணவில்லை. தனதுகையிலிருந்த பென்னிநாணயம் மோதுண்ட வேகத்தில் கையிலிருந்தும் தட்டுண்டு பறந்து கைபறிந்து காணமற்போனதையிட்டுத்தான் அவன் கவலைகொண்டவஞய்த் தனதுவாயைத்திறந்து கோவென்று அழத்தொடங்கிஞன். இதைக்கண்ணுற்ற பெரியபையனின் உடல்பதறியது. வதனம்வெளுறியது. உடனே அவன் பிருன்ஸின்பக்கமாக வீதியில் பரவப்பட்டிருந்த பரற்கற்களின்மேல் முழந்தாளிட்டு, "தம்பி, எங்கே நோகிறது? ஏதும்காயமா? தயவுசெய்துசொல்லும்"என்று இரக்கமாகக்கேட்டான்.

பிருன்ஸ் முன்போலவே அழுதுகொண்டு கண்ணீர்பெருக "எனது பென்னிநாணயம், எனது பென்னிநாணயம், அதைநான் இழந்துபோகச் செய்துவிட்டாயே"என்று விம்மல் பொருமலுடன்கூறிஞன்.

அப்போதுதான் பெரியபையன் கருமத்தைவிளங்கிக்கொண்டான். "இதற்காகத்தம்பி, நான் வருத்தப்படுகிறேன்; ஆஞல், ஐயோ, உனக்குத்தர என்னிடம் பென்னிநாணயம் ஒன்றுமில்லையே; அன்றியும், இப்போதுநான் வேலைக்குப் பிந்திப்போய்விட்டேன்; விரைவிலேநான் பியாஞேத் தொழிற்சாலைசென்று எனது வேலையைச்செய்யாவிடில் பிறகு நாங்கள் இருவருமே அழவேண்டிவரும்" என்று பிருன்ஸின்வதனத்தைத் தடவிக்கொண்டே அவன் உருக்கமாகக்கூறிஞன்.

இதைக்கேட்டதும் பிருன்ஸின் அழுகைநின்றது. அவன் முகத்தில் புன்னகைதவழ்ந்தது. "அப்படியாஞல் பியாஞேத்தொழிற்சாலைக்கு என்னையும் அழைத்துச்செல்; பணத்தை இழந்ததை நான்பறுவாய்பண்ணமாட்டேன்"என்றுசொன்ஞன்.

பெரியபையன் கவலையுடன் சிறிதுவேளை யோசித்துவிட்டுப் பிருன்ஸின் கரத்தைப் பற்றிப்பிடிக்க, இருவரும் பியாஞேத்தொழிற்சாலையைநோக்கி ஓட்டமும்நடையுமாகச் சென்ருர்கள்.

தொழிற்சாலைபோய்ச் சேர்ந்ததும் "இப்போது நீ அதிகம்சாவதானமாய் இருக்கவேண்டும்"தம்பி என்றுகூறிஞன்பெரியபையன். ஆஞல், பியாஞேக்களுடன் எவ்விதம் புழங்குவதென்று பிருன்ஸுக்குச் சொல்லப்படவில்லை. அதஞல்அவன் சிறிதுவேளையின்பின் மிகவுங்கவனமாகத் தனக்குஅதிகம் சமீபத்திலிருந்த பியாஞேவின்பக்கத்திலிருந்த முக்காலிமேல் மெதுவாக உட்கார்ந்து பியாஞேவின் இசைக்கருவிநாக்குகளை (Keys)மிருதுவாகத் தொட்டு அழுத்திஞன். மெல்லிசையாக அதனை மீட்டத்தொடங்கிஞன்.

அப்போது பெரியபையன் அவனிடஞ்சென்று "இது என்ன இராகம்" என்று வியப்புடன்கேட்டான்.

பிருன்ஸ் அவனைப்பார்த்துப் புன்னகைசெய்து, "எமது தேவஅன்னைக்கென்று நானே இயற்றிய ஓர்வாழ்த்துக் கீதம் இதுவாகும்; இதனைஎழுதுவதற்குத்தான் ஓர்கடுதாசித்தாள்வாங்க வந்தேன்; ஆஞல், நான்கொண்டுவந்த பென்னிநாணயத்தை இழந்துபோனேன்; இப்போது அந்தக்கீதம் முழுவதையும்ஞாபகப்படுத்த முடியாமலிருக்கிறது" எனக்கூறிஞன்.

இதற்குப்பின் பியாஞேக்களில்பயிற்சி பெறுவதற்காகப் பிருன்ஸ் தொழிற்சாலைக்குப் போகும்போதெல்லாம் எவருமே அவனைக்கவனிக்கவில்லை. சிலவேளைகளில் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பணியாளர்கள் பலகைகளை அரிந்து ஒப்பமாக்கிமினுக்கும் தங்கள் வேலைகளைத்தானும் விட்டுவந்து பிருன்ஸ் பியாஞவாசிப்பதைச் சூழவாநின்று ஆர்வத்துடன்கேட்டுஅதிசயித்துநிற்பார்கள்.

அங்ஙனமாக ஒருநாள் தொழிலாளி ஒருவன் பிருன்ஸுக்கு ஒருசெய்திகொண்டுவந்தான். "சக்கரவர்த்தியின் சங்கீதகலாசாலைக்கு நாளைத்தினம் உன்னைஅழைத்துச் செல்லுமாறு நீ ஏன் உனதுதகப்பனைக் கேட்கப்படாது?"என்று அவனைக் கேட்டான். "சம்பளம் கொடுக்கமுடியாத சில பிள்ளைகளை அவர்கள் தேர்தல்பரீட்சையில் சித்தியடையுமிடத்து இலவசமாகப் படிப்பிக்கிருர்களே" என்றும் கூறிஞன்.

இதைக்கேட்டதும் பிருன்ஸுக்குப் பெருஞ்சிரத்தை ஏற்படலாயிற்று. அன்றிரவு இராப் போசனத்தின்பின் தான்கேள்விப்பட்டதைத் தன் தந்தையிடம் எடுத்துக்கூறிஞன்.

"ஒருசங்கீத வித்துவாஞக அல்ல, ஆஞல், என்னைப்போல நீயும் ஒருபாடசாலைஆசிரியஞய் இருக்கவேண்டுமென்றுதான் நான் ஆசிக்கிறேன்" என்று அவன்தந்தை கோபப்பார்வையுடன் கூறிஞர். "ஆயினும் அந்தமனிதன்கூறியது உண்மையாயிருந்தால் அந்தக்கலாசாலையில் அதிகம்சிறந்த கல்வியை நீபெற்றுக்கொள்ளக் கூடியவஞவாய்; என்ருலும் தெரிவுப்பரீட்சையில் சித்தியடைவாயென்று நீ எப்படி நம்புகிருய்என்பது எனக்குத்தெரியவில்லை" என்ருர் மீளவும்தந்தை.

"தந்தாய், தயவுசெய்து என்னைப் போகவிடுங்கள்"என்று கெஞ்சிக்கேட்டான் பிருன்ஸ். அப்போது பிருன்ஸின் தமையன்மார்இருவரும் முன்வந்து மறுதினம் அவனைப்பட்டணத்துக்கு அழைத்துச்செல்ல உடன்பட்டார்கள். அத்துடன்விஷயம் ஓர்முடிவுக்கு வந்துவிட்டது.

மறுநாள் சக்கரவர்த்தியின் சங்கீத கலாசாலைச் சபாமண்டபத்தில் கூடியிருந்தவர்களில் பிருன்ஸைப்போல வேறெவருமே கேவலமாகக் காணப்படவில்லை. அவன்தலைமேல் பழுதடைந்த ஓர்பழையதொப்பி இருந்தது. அவனதுமூக்கில் அதிகம்சிறிய மூக்குக்கண்ணுடிஒன்று இருந்தது. அப்போது அங்கிருந்த பையன்களில்ஒருவன், "இவன் எனதுதகப்பஞரின் தோட்டக்காவலனைப்போல் தோற்றுகிருனே" என்று கேலிபண்ணி உரத்துச்சொன்ஞன். இதைக் கேட்டதே எனைய

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

---

## சேமக்காலையில்

# யாத்திரைக் கன்னிகை

—தாண்டவன்வெளி, மட்டக்களப்பு

கடந்த ஆறுமாதகாலமாக நமது பங்கிலுள்ள கிறீஸ்தவஇல்லங்களைத் தரிசித்து, அருள்மழைபொழிந்து, திருச்சபையாகிய மந்தையைவிட்டுச் சிதறிய ஆடுகளையும் மந்தையில்சேர்த்து, பாவிகளைமனந்திருப்பி இத்தகைய ஆன்மநலன்களுடன உலகநலன்களையும்கூட அபரிமிதமாக அளித்து, வந்தனைவழிபாடுகளையும், செபதபங்களையும்; இடையருத செபமாலைகளையும் அன்போடேற்றுத் தமதுமாசற்ற இருயத்துள் அனைவரையும் சேர்த்துவந்த யாத்திரைக்கன்னிகை — பாத்திமா அன்னை இப்பங்கில் மரித்துப்போன விசுவாசிகளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளச் செய்யும்வண்ணம் கள்ளியங்காடு என்றழைக்கப்படும் இப்பங்கின் சேமக்காலையைத் தரிசிக்க நிகழ்மதி 1-ம்நாளன்று பிற்பகல் 6-30 மணியளவில தாம்தங்கியிருந்த இல்லத்திலிருந்து சுற்றுப் பிரகாரமாக எடுத்துச்செல்லப்பட்டா.

அன்றுசேமக்காலை ஓர்நவமான நகரமாகக் காட்சியளித்தது. ஆம், இச்சேமக்காலை பலஆண்டுகளாகக் கண்டு கேட்டறியாத ஓர்மாபெரும் அதிசயத்தைக் கண்டது, கேட்டது. அன்று அங்குநிலவிய பக்திப்பரவசமோ பகருந்தரமன்று. நமது கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளின் நல்லெண்ணத்தை நிறைவேற்ற எமது பங்கில் புதிதாகஆரம்பிக்கப்பெற்ற யோசேவாஸ் வாலிபசங்கத்தினர் முன்வந்தனர். இச்சங்க அங்கத்தினரின் முதல் சேவையும், அயராஉழைப்பும் சேமக்காலையில் அழகுடன் தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஆலயம், பலிபீடம் என்பனவாகும். இரவைப் பகலாக்கக் கூடியதாக மின்தீபங்கள் இணைக்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சிகளில் எல்லோரும் பங்குகொள்ளத்தக்கதாக ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருந்தது. சுற்றுப்பிரகாரம் சேமக்காலையை அடைந்ததும் உயரிவைபவங்களிடையே கட்டளைக்குரவர் பாத்திமாஅன்னையின் திருச்சுரூபத்தைப் பீடத்தின்மேல் எழுந்தருளச்செய்தனர். மரித்தோர்க்கு ஆறுதல் அளிக்கும்வகையில் ஓர்இரவையும், பகலையும் செபதபங்களில் ஈடுபடுத்திய இவ்வைபவம் சீவியர்களும், மரித்தவர்களுமாய தாண்டவன்வெளிப் பங்கினர்மத்தியில் என்றுமே மறத்தற்கரிய தொன்ருகும். மரித்துப்போன பெற்ருர், சகோதரர், உற்ருர், மற்ருேர்எல்லாம் தங்கள் உத்தரிப்புக்கடன் நீங்க, குறைய அன்றுஇரவும், பகல்முழுவதும் நிரைப்படி பக்திச்சபைகள், பாடசாலைகள், பங்குக்கிறீஸ்துவர்கள் பகல் முழுவதும் இடையருது செபமாலைஓதி வேண்டுதல் செய்துகொண்டிருந்தனர். கார்த்திகை 2-ம்நாளன்றுகாலை பங்குத்தேவாலயத்தில் கட்டளைக்குரவரால் 2பூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அவரும் இடையிடையே சேமக்காலைசென்று நிகழ்ச்சிகளைக் கண்காணித்துவந்தார். பிற்பகல் 4-30மணி. தாண்டவன்வெளி, புளியடிக்குடாப் பங்கினர் பெருங்கூட்டமாயினர் சேமக்காலையில். புளியடிக்குடாப் பங்குக்குரவர் வண. ஏ. செலர்சுவாமிகள் மரித்தோருக்காக வேண்டுதல்செய்வதுபற்றி ஓர்பிரசங்கம் செய்தனர். அதன்மேல் எமது பங்குக்குரவரால் 3-வதுதிவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. சேமக்காலை ஆரம்பமாகி இத்தனை பல ஆண்டுகளின்பின் அங்கு பூசைப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது இதுவே முதன்முறையாகும். இருபங்குகளையும் சேர்ந்த பெருந்திரளானேர் திருவிருந்தருந்தி, மரித்தோருக்காக வேண்டிக்கொண்டனர். அதன்மேல் வழமைப்பிரகாரம் கல்லறைகளை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கு இருபங்குக்குரவர்களாலும்நடத்திவைக்கப்பெற்றது. முடிவில் பாத்திமா அன்னையின் திருச்சுரூபம் அடுத்தஇல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களின்திருநாளை இத்தனைபத்திச்சிறப்புடன் கொண்டாடுவதற்கு வழிவகுத்த எமதுகட்டளைக்குரவருக்கும், தற்காலிக கோவில்அமைத்து, இரவுபகலாகத் தொண்டாற்றி அரும்பணிபுரிந்த யோசேவாஸ் வாலிபர்சங்க அங்கத்தினர் அனைவர்க்கும் எமதுபங்கினர் சார்பில் நன்றிதெரிவிக்கின்ருேம்.

**மங்களமான மீஷன்விற்பனை:**

ஐப்பசித்திங்கள் 31-ஆம்நாள் சனிவாரம். கார்த்திகைத்திங்கள் 1-ம்நாள் ஞாயிறுவாரம் கிளென்னி ஆண்கள்கழகம் அதிர்ஷ்டப்பைகள், ஆற்றல்அறியும் பல்வேறு விளையாட்டுகள், இன்சுவையூட்டும் இனிப்புப்பைகள், உவகைதரும் உணவுவகைகள், களையாற்றும் குளிர்பானம், கரைதயிர், ஐஸ்கிறீம், சுடச்சுடத் தேநீர், காப்பிப்பானம், பற்பலபழவகை, மரக்கறிவகை இன்னோரன்னவற்றைக் கொண்டகடைகளாக விளங்கியது. பக்திச்சபைகளைச் சேர்ந்தாரும், பாடசாலையினரும் தத்தம்கடைகளில் உற்சாகமுடன் பணியாற்றத் தயாராகிக்கொண்டிருந்தனர். நேரம் பிற்பகல் 3மணி. மிஷன் நாடுகளுக்கான நிதிதிரட்டும் இவ்வைபவத்தைக் கிழக்குமாகாண பொலிஸ்ப்குதி அதிகாரி திரு. வி. ஈ. பெரரா அவர்கள் ஆரம்பித்துவைத்தனர். கட்டளைக்குரவரும், பங்கினரும் கூடிநின்று வரவேற்றனர். யாவரும் குதூகலத்துடன் பொருட்களை விற்பதிலும், வாங்குவதிலும், பல்வேறுவிளையாட்டுகளில் பங்குபற்றுவதிலும், அதிர்ஷ்டம் தெரிதலிலும் ஈடுபட்டனர். முன்தினம் இரவு 7மணிவரையும், அடுத்தநாள் நண்பகல் 12மணிவரையும் விற்பனை நடைபெற்றது. கட்டளைக்குரவரதும், பங்கினரதும் ஒத்துழைப்பின்பயஞக மிஷன் நாடுகளுக்குத் திரட்டப்பெற்றநிதி 1,200 ரூபா. இவ்விற்பனையைத் திறம்பெறநடத்தப் பணிபுரிந்தார் அனைவருக்கும் எமதுநன்றி.

**பாப்பரசர் தினம்:**

தற்போதைய திருச்சபைத்தலைவராய 23-ம்அருளப்ப பாப்பரசர்தினத்தைக் கார்த்திகைத்திங்கள் 1-ம்நாள் அன்று கொண்டாடினேம். காலை திவ்வியபூசை நிறைவேற்றிப் பாப்பரசர் தினம் பற்றிய பிரசங்கம் செய்யப்பட்டது. பிற்பகல் 4மணியளவில் திருமணி ஆராதனைநடத்தித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. அடுத்து 4-ந்திகதிபுதன்வாரம் காலை 8.30மணியளவில் கிளென்னி, ஆண்கள் பாடசாலை முன்றிலில்உள்ள கொடித்தம்பத்தைச்சூழவர ஆண்பெண்பாடசாலையினர் கூடினர். கட்டளைக்குரவர் பாப்பரசரைப்பற்றி ஓர்சொற்பொழிவு நிகழ்த்தி, முறைப்படி பாப்பரசர்கொடியை ஏற்றிவைத்தார். அதன்மேல் பாப்பரசர்கீதம் படிக்கப்பட்டது. பெண்கள்பாடசாலை ஆசிரியை திருமதி எம். யோசெவ், ஆண்கள்பாடசாலை ஆசிரியர் திரு. வி. சோமநாதன் என்பவர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. கட்டளைக்குரவர் அன்றுபிற்பகல் பாடசாலைக்கு விடுமுறைஅளித்தார். யாவரும் நன்றிகூறி மீண்டனர்.

### பத்திரிசியாரின் வரலாறு சினிமாப்படமாகிறது

பிரபல படாதிபதியான தேஷ்மொண்ட் ஒ டொனவன் அவர்கள் அர்ச். பத்திரிசியாரின் வரலாற்றைத் தாம் படமாகத் தயாரிக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். நாலு இலட்சத்துக்கு அதிகமான பவுண்களைச் செலவழித்துத் தயாரிக்கப்படும் இச்சினிமாப் படத்திற்குச் 'ஷாம்ரொக்கும், பாம்புகளும்' என்று நாமதேயமிடப்பட்டுள்ளது. அயர்லாந்திலுள்ள அர்ச். பத்திரிசியாருடன் சம்பந்தப்பட்ட தலங்களிலேயே தயாரிக்கப்படும் இச்சினிமாப்படத்தில் குதிரைவீரர்களாகவும், இராணுவத்தினராகவும், இரதங்களைச் செலுத்திச்செல்வோராகவும், அரசனின் பணியாளராகவும் நடிப்பதற்கென ஏராளமான துணைநடிகர்கள் தெரியப்பட்டுள்ளனர். இன்னும் பதினெட்டுமாதங்களின்பின் இப்படம் பொதுமக்கள் காட்சிக்குத் தயாராகவிருக்கும்.

### பிரித்தானிய குருப்பிரசாதிகளின் வேலையாட்களுடன்...

சமீபத்தில் பிரித்தானியெங்கணுமுள்ள குருப்பிரசாதிகளின் வீட்டுப்பணிகளைக் கவனிப்போர் 27பேர் நித்தியநகரமான ரோமாபுரிக்குச் சென்றபோது பரிசுத்த தந்தையின் பிரத்தியேக பேட்டியருளப்பெற்றனர். பிரித்தானியிலே வெளிவரும் பிரசித்திபெற்ற கத்தோலிக்க வாரப்பத்திரிகையான 'யூனிவேர்ஸ்'மூலம் செல்வி ஜொய்ல்என்பவர் இந்தப்பிரயாணத்தை ஒழுங்குபடுத்தினர். இதில் கலந்துகொண்ட வேலையாட்கள் யாத்திரைசெய்யும் தருணத்தில் அவர்கள் சார்பாகக் குருப்பிரசாதிகளின் வீட்டுவேலைகளைக் கவனிப்பதற்காக இனசனர்களும், மற்றும் பலதொண்டர்களும் முன்வந்தனர். சிறிது நேரம் இவர்களுடன் சம்பாஷித்த பரிசுத்ததந்தை அவர்களைப் பிரிந்துசெல்லும்போது தமது தலைச்சீராவினால் அவர்களின் தலைகளைத்தொட்டு ஆசீர்வதித்தார்.

### அடிமைகட்குப்பதிலாக மாளிகையும் காசோலையும்

பரம்பரை பரம்பரையாக நைஜீரியநாட்டில் அனுட்டிக்கப்பட்டுவந்த ஓர்வழக்கம் சமீபத்தில் அந்நாட்டின் கத்தோலிக் இளவரசி அதெசுவாவின் திருமணத்தின்போது முற்றாகக்கைவிடப்பட்டுப் புதியதோர்வழக்கம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இளவரசியின் திருமணஸ்ரீதனமாக 80அடிமைகளை மணமகனுக்கு அளிப்பதே பழைய வழக்கமாகும். இவ்வழக்கத்தை மாற்றிய இளவரசியின் தந்தை இரண்டாவது அகென்சுவா அரசர் ஓர் மாளிகையையும், காசோலையொன்றையும் மணமகனான டக்றர் இமோவனுக்குஅளித்தார். அசாபாவின் மேற்றிராணியாரான கெல்லி ஆண்டவரவர்கள் இத்திருமணத்தை நிறைவேற்றிப் பாப்பரசரது ஆசியையும் அளித்தார்.

## லிதுவானியாவில் விசுவாசம் நிலைநிற்கின்றது

லிதுவானியாவிலிருந்து இரகசியமாய்க் கிடைக்கப்பெற்ற கடிதமொன்றில், 86வயதுடைய மேற்றிராணியாரொருவர் எப்படிநாட்டில்நின்று கடத்தப்பட்டுத் தமது கடமைகளைப் புரிவதில் தடைசெய்யப்பட்டாரென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கைசியாடோரிஸ்நகரின் மேற்றிராணியாராகிய மத்துலியோனிஸ் ஆண்டவர் 1940-ம்ஆண்டு ருஷியாவின் மறியல்வீடொன்றில் 10 வருடம் சிறைவைக்கப் பட்டபின்னர், 1958-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 17-ந்திகதி செதுவாஎன்னும் பட்டணத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார். சிலாட்கேவிச்சியுஸ் என்னும் மேற்றிராணியார் மேற்றிராணித்துவ பட்டம்பெற்ற இரண்டாம் வருடத்திலிருந்தே தமது கடமைகளைப்புரிய இயலாமல் தடைசெய்யப் பட்டிருக்கின்றார். "பரிசுத்தபிதாவாகிய எமது அருளப்பருக்கு மனச்சந்தோஷத்தைத் தெரிவியுங்கள். அவர் மனஆறுதலுடன் இருக்கலாம். ஏனெனில், வடபகுதியின் கோட்டைபோன்ற லிதுவானியா சேமமே இருக்கின்றது. நரகத்தின் வாயிலோ அதை மேற்கொள்ளமாட்டாது" என்று மேலும்அக்கடிதத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

## யூகோசிலவக்கிய ஜனாதிபதிக்கு வேண்டுகோள்

யூகோசிலேவியநாட்டிலே தமது இல்லத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் கருதினால் ஸ்ரீபினக் ஆண்டகையை விடுதலை செய்யுமாறுகோரி விண்ணப்பங்கள்பல லண்டனிலுள்ள யூகோ தூதுவர் காரியாலயத்தில் போய்ச் சேரத் தொடங்கியிருக்கின்றன. இந்தக் கடிதங்கள் அனைத்தும் யூகோவின் ஜனாதிபதி மார்ஷல் ரிற்றுவுக்கு விலாசமிடப்பட்டிருக்கின்றன. இந்தஇயக்கத்தைப் பிரபலகத்தோலிக்கவாரப் பத்திரிகையான 'யூனிவேர்ஸ்' ஆரம்பித்திருக்கின்றது. நாகரீகமடைந்தநாடுகளும் கொடுந்துரோகம்புரிந்த கைதிகளைக்கூட அவர்கள்சிறையில்அமைச்சலும், ஒத்துழைப்பும் காட்டிநடந்தால் அவர்களின் தண்டனைகாலத்திலே சிலவருடங்களைக்குறைத்து மன்னிப்பருளுகின்றன. ஆயின், 13 வருடங்களுக்குமுன் யூகோ நீதிமன்றத்தினால் தேசத்துரோகியெனக் குற்றஞ்சாட்டப்பட்ட கருதினாலுக்கு இதுவரை எந்தவிதமான சலுகையும் அளிக்கப்படவேயில்லை. இந்தக் கருதினால் ஆண்டகைக்கு அளிக்கப்பட்ட பதினாறு வருடக்காவல் முடிவடைய இன்னும் மூன்று வருடங்கள் இருக்கின்றனஎன்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வாசிக்கத்தெரியாத பத்திரிகை வாசகர்கள்

தங்கனைக்காவிலிந்து வெளியாகும் கத்தோலிக்க பத்திரிகையான 'கியோங்கி' (தலைவர்) யின் வாசகர்கள் வாசிக்கத்தெரியாதவர்களாம். இவர்களில் அதிகமானோர் முதியவர்கள். தங்கள்வாழ்நாளில் எழுத்துகள்என்றால் என்னஎன்றே தெரியாதவர்களாம். மாதமிருமுறை வெளியாகும் 'கியோங்கி' எப்போது பிரசுரமாகுமென ஆவலுடன்காத்திருப்பார்கள் அதன்வாசகர்கள். வெளிவந்ததும் சிறுசிறு கூட்டங்களாகக் கூடுவார்கள். வாசிக்கத் தெரிந்த ஒருசிறுவன் அல்லது சிறுமி பத்திரிகையை முதலில் இருந்து கடைசிவரை வாசிப்பதைப் பொறுமையுடன் அவதானிப்பார்கள். பின்னர் அதில் வெளியாகியுள்ள விடயங்களைப் பற்றி விவாதங்கள் நடைபெறும். கியோங்கி 1949-இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது 22,000 பிரதிகள் ஒருமுறையில் வெளியிடப்படுகின்றன. இப்பத்திரிகையினால் பயனடைபவர்கள் 2,50,00 பேருக்கும் அதிகமானோராகும். எமதுநாட்டில் வாசிக்கத்தெரிந்தவர்களில் கத்தோலிக்க பத்திரிகைகளை வாங்குபவர் எத்தனைபேரோ?

## மலைக்கிராமத்துக்கு விஜயம்

அல்பன் குன்றுகளிலுள்ள மிகவறியகிராமங்கட்கு அருளப்ப பாப்பரசர் சமீபத்தில் தரிசனை அளித்தார். கடந்த ஒருநூற்றாண்டுகாலமாக இக்கிராமங்கள் இவ்விதம் ஒருபாப்பரசரின் தரிசனையைப் பெற்றதேயில்லை. ஒருகிராமத்தில் அவர் தரித்துக் கன்னியர் நிவாசமொன்றுக்கும், அனாதர்சாலையொன்றுக்கும்விஜயம்செய்தார். இன்னொரு கிராமத்தின் சிற்றாலயத்தில் அவர் சிறிது நேரம்தரித்துச் செபித்தார். அவர்சென்ற பாதைகளிலெல்லாம் மக்கள்திரளாகக்குழுமிநின்று தங்கள்மகிழ்ச்சிகளைத் தெரிவித்தனர். பாப்பரசர் புன்னகையுடன் தமது அப்போஸ்தலிக்கஆசியை அளித்தவண்ணமே சென்றார்.

### ஹங்கேரிக்காகப் பிரார்த்தனை செய்கின்றார்

ஹங்கேரியதேசத்தின் முதலாவது கத்தோலிக்க அரசரான அர்ச். ஸ்ரீபனின் திருநாளைக் கொண்டாடுமுகமாகச் சமூகமளித்திருந்த எட்டாயிரம்விசுவாசிகளின் முன்னிலையில் பாப்பரசர் பேசியபோது, நோயினாலும், கவலையினாலும் துன்பமுறும் தம் மைந்தனையெண்ணி ஒருதந்தை எவ்விதம் வருந்துவாரோ அவ்விதம் ஹங்கேரியில் கத்தோலிக்க விசுவாசத்தைநசுக்க எடுக்கப்படும் முயற்சிகளைக்கண்டு தாம் மிகவும் கவலையுற்றுள்ளதாகத் தெரிவித்தார். அந்தத்தேசம் இப்போது மற்றையதேசங்களிலும் பரவிவரும், மக்களின்சுதந்திர வழிபாட்டுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் மிகக்கேவலமான நடவடிக்கைக்கு ஒருசாட்சியாக விளங்குகின்றது என அவர்மேலும்கூறினார். பின்த அங்குகுழுமியிருந்தோர் அனைவருடனும் ஹங்கேரியதேசத்திற்காக விசேடவிதமாகச் செபித்தார் பரிசுத்த தந்தை.

### இலங்கை மரியநாயகிசபைக் குருமாரின் புதியதலைவர்

அதிவண. அலெக்சிஸ் சேரு சுவாமியவர்கள் இலங்கையிலுள்ள மரியநாயகிசபைக் குருமாரின் புதிய சிரேஷ்டராக நியமனஞ்செய்யப் பட்டிருக்கிறாரென அறிகிறோம். இதுவரை அவர்களின் சிரேஷ்டராயிருந்த அதிவண. ஜெரூட் போட்டின் சுவாமியவர்கள் மரியநாயகிசபையின் ஒழுங்குகளைத் திருத்தியமைப்பதற்காக நிறுவப் பட்டிருக்கும் ஆலோசனைச்சபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### கருதினால் ஆண்டகையின் மறைவு

அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தின் அத்தியட்சகுரவரான கருதினால் பெல்டறிக்கோ ரெடெச்சினி ஆண்டவர் நிகழும் கார்த்திகைமாதம் 2-ந்திகதியன்று தமது 84-ம்வயதில் காலமானாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. கருதினால் ரெடெச்சினி ஆண்டவரின் மரணத்தினால் கருதினால்மாரின் தொகை 71 பேராகக் குறைந்திருக்கிறது.

### நடமாடும் பொருட்காட்சி

காலஞ்சென்ற 12-ம்பத்திநாதபாப்பரசர்விடுத்த "விசுவாசத்தின் கொடை" என்னும் நிருபத்தின் விளக்கமடங்கிய நடமாடும் பொருட்காட்சி மோட்டர் ரதம் ஒன்று ஸ்பானியதேசத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்றது. இப்பொருட்காட்சியை இதுவரை இரண்டுலட்சம்பேருக்கு அதிகமானோர் கண்டுகளித்துவிட்டனர். இந்த மோட்டர்ரதம் ஏற்கனவே 7,500மைல்தூரம் பிரயாணஞ் செய்துவிட்டது. இப்பொருட்காட்சிரதத்தில் சுலோகஅட்டைகளும், விளக்கப்படங்களும், புத்தகங்களும் அடங்கியுள்ளன.

## கார்த்திகை மாதம்

**பொதுக்கருத்து:** உலக அரசியல் அமைப்புகளைக் கவிழ்த்து ஒழிக்கப் பொதுவுடைமைசெய்யும் முயற்சிகளை முறியடிப்பதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** மடகஸ்கார் தீவிலே தனிவாழ்விலும், பொது வாழ்விலும் கிறீஸ்தவ மனப்பான்மை ஆழமாகப்பதியும்படியாக மன்றாடிக் கொள்வது.


சத்திய வேத

**பாதுகாவலன்**

1959-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 19-ந் திகதி


## "உடன்பிரயாணிகள் நாம்"

இளங்கத்தோலிக்க தொழிலாளிகள் இயக்கத்தின் (Y. C. W.) சர்வதேச தரிசகரான திரு. றேனே டெலேகுளூஸ் என்பவரின் யாழ்ப்பாண விஜயம் சமயோசிதமானவிதமாய் நடந்தேறியதையிட்டுச் சந்தோஷமானோம்.

சென்றவாரத்து ஆசிரியவசனத்தில் நாம்உணர்த்தமுயன்ற உண்மையைப் பிரான்ஸ்தேசத்திற்பிறந்து வளர்ந்தவரும், மேற்கூறிய இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவருமான இவர் "நேரடியாய் எண்பிக்கிறேன்" என்று சொல்லி வந்தவர்போலவிருக்கின்றது.

தொழிலாளியென்றமட்டில், அவர் தம்நிலைபரத்தையிட்டு வெட்கப்படவில்லை. அந்நிலைபரம் தேவனின் அழைத்தல் என்று உணர்ந்துகொண்டு அவ்வழைத்தலில் பூரணகிறீஸ்தவ பிரமாணிக்கமும், முன்மாதிரியும் காட்டி நடப்பதே தம்தலையாய கடமைஎன்று சாதித்துநின்றார்.

மனிதன் நித்திய கடவுளின் கரங்களினின்றுவரும் உன்னத சிருஷ்டி. ஞானஸ்நானத்தினாலும், உறுதிப்பூசுதலினாலும் ஒவ்வொரு கிறீஸ்தவனும் இவ்வுலகில் பொறுப்புள்ளவோர் கடமையை ஏற்றுக்கொண்டான். கிறீஸ்துநாதருடன் கூட உலக இரட்சணிய அலுவலில் தன்நிலைபரத்துக்குத் தக்கதும், தன்னால் இயன்றளவுமான முயற்சிஎடுப்பதிலேயே இக்கடமை அடங்கியுள்ளது. இது பத்தியுள்ள சிலருக்குமாத்திரம் உரியதென்றெண்ணுவது தப்பிதம். குருத்துவபதவியினால் அல்லது சந்நியாசஅழைத்தலினால் மாத்திரம் இது வந்துசேர்கிறதென்பதும் பிழையானதே. இக்கடமையோ நாம் பச்சைக்குழந்தைகளாயிருந்தபொழுதே, எம்மேல் அருள்தரும் ஞானஸ்நானத்தின் சலமானது ஊற்றப்பட்டவேளையில் ஏற்பட்டது.

ஒரு சரீரத்தில் அவயவங்கள் பலஇருக்கின்றன. ஆனால்,அவைகள்எல்லாம் ஒரேதொழிலைச் செய்வதில்லை. எனவே, தொழில் வேற்றுமையின் காரணமாக அவைகளுக்குள்ளே கிரமம் உண்டு. அவ்வண்ணமே "பலபேராகியநாமும் கிறீஸ்துநாதரில் ஒரேசரீரமாகவும், தனித்தனியே பார்த்தால் ஒருவருக்கொருவர் உறுப்புக்களாகவும் இருக்கின்றோம்" (உரோ. 12, 5).

"காலானது, நான் கையாயிராததினாலே நான் சரீரத்தின் உறுப்பல்ல என்றால், அதனாலே அது சரீரத்தின் உறுப்பாயிராதோ? காதானது நான் கண்ணாயிராததினால், நான் சரீரத்தின் உறுப்பல்லஎன்றால் அதனாலே அது சரீரத்தின் உறுப்பாயிராதோ? சரீரமெல்லாம் கண்ணாயிருந்தால், கேள்வி எங்கே? எல்லாம் செவியாயிருந்தால், மோப்பம்எங்கே? ஆனால், சருவேசுரன் உறுப்புகளில் ஒவ்வொன்றையும் தமதுசித்தத்தின்படி சரீரத்தில் வைத்திருக்கிறார். அவையெல்லாம் ஒரே உறுப்பாயிருந்தால் சரீரம் எங்கே? (1கொரி. 12, 15—19).

ஓர் புகையிரதத்தில் பலவகுப்புப் பிரயாணிகள் இருந்தாலும் ஒவ்வோர்வகுப்பினரும் அரசாங்கத்தின் மக்கள்தான்; ஒரேநோக்கத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் இரதத்தில்செல்லும்பிரயாணிகள் தான். சாதாரணகிறீஸ்துவனே, போதிக்கும்திருச்சபை அதிகாரிகளுடன்கூட ஒரேதுறையை நோக்கிச்செல்லும் மோட்சபிரயாணி. மூன்றாம்வகுப்பிற் செல்லும்பிரயாணியைப்போன்றவனாயினும், கற்கும்திருச்சபைக்குச் சேர்ந்த தேவபிள்ளை. இந்நிலைமையில் தேவனாகிய பிதாவே அவனை அமர்த்தியுள்ளார். இதுவே அவனுக்குரிய கிறீஸ்தவ அழைத்தல், அவன் மகிமை, அவன்பெருமை.

எந்தஉத்தியோகத்தில் அமர்ந்திருந்தாலும், எவ்விதஈனமான கஷ்டதொழிலில் ஈடுபட்டவனாயிருந்தாலும், மோட்சபிரயாணிக்கேற்றமுறையில் தனதுஅழைத்தலுக்குரியதாகிய சீவியத்தைக் கிறீஸ்தவமுறையில் நடத்திமுடிப்பதே கிறீஸ்தவனின் சீவிய நோக்கம்.

கண்ணானது கரத்தை நோக்கி: உன்உதவி எனக்கு வேண்டியதில்லையென்றும், தலையானது கால்களைநோக்கி: நீங்கள் எனக்கு அவசியமில்லையென்றும் சொல்லக்கூடாது. ஆனால், சரீரத்தின் அவயவங்களுக்குள்ளே எவைகள் அதிகம் பலவீனமாகக் காணப்படுகின்றனவோ, அவைகளே அதிகம் அவசியமாயிருக்கின்றன. மேலும் நமக்கு அதிகஈனமாகத் தோன்றுகிறசரீரத்தின் அவயவங்களை அதிக கனம்பண்ணுகிறோம். நம்மில் மானமற்றவைகளையும் அதிகயோக்கியமாய் நடத்துகிறோம்." (1கொரி. 12, 22—23). உறுப்புக்கள் ஒவ்வொன்றும் உடம்பிற்கவசியம். ஒவ்வோர் கிறீஸ்தவனும், எத்தகையநிலைமை வகித்தவனாயிருப்பினும், கிறீஸ்தவ சரீரமாகிய திருச்சபைக்கு அவசியமானவன். "உடன்பிரயாணிகள் நாம்"எல்லோரும்.

---

● உலகிலேயே மிகப்பிரமாண்டமான வானொலித் தூரதிருஷ்டி யந்திரம்ஒன்றைத் தற்போதுசோவியற்ருஷியா அமைத்துவருவதாக லண்டனிலிருந்து சென்ற 2-ந்திகதி செய்தி கிடைத்திருக்கிறது. இதிலுள்ள தூரதிருஷ்டிக் குழாயின்நீளம் 750 அடியென்றும், பிரித்தானியிலுள்ளதிலும் பார்க்க இது மிகப்பெரிதாய் இருக்குமென்றும் மஸ்கோவானொலி தெரிவித்திருக்கிறது.



மெய்விவாகத்தைப் பற்றிப்

## 11-ம்பத்திநாத பாப்பரசரின் நிருபம்

தேவகிருபா கடாட்சத்தால் பாப்புவாகியநாம், குடும்பங்களையும், சனசமூகத்தையும் தாக்குவனவாகிய தற்கால நிலைபரங்கள், அவசியங்கள், தப்பறைகள், அக்கிரமங்கள் காரணமாய், மெய்விவாகத்தைப்பற்றிச் சகலருக்கும் ஆசிகூறிவிடுக்கும்,

### சாதாரண நிருபம்

நித்தியபிதாவின் திருச்சுதனான எங்களாண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதர் பாவத்தினாற் கெட்டுப்போன மனுச்சுபாவத்தைத் தாமும்எடுத்து, மனுக்குலத்தை ஈடேற்றவேண்டுமெனும் பேரன்பினால் விவாகப் பொருத்தனையை ஏற்படுத்தி அவ்விவாகப் பொருத்தனையானது, குடும்பசீவியத்துக்கும், மானிடர்தம்முட் சாதாரணமாய்ப் புழங்கிக் கொள்ளவேண்டிய முறைமைக்கும் அத்திவாரமாயிருக்க நிருபித்து அருளினார். அதுவுமல்லாமல் அவர் அவ்விவாகப்பொருத்தனையை, சுவிசேஷப் பிரமாணத்தின் "மகாதேவதிரவிய அனுமானமும்" ஆக்கி, அது தன்ஆரம்பத்தில் கொண்டிருந்த பரிசுத்தநிலையை அடையும்படியும் செய்தருளினார். செய்தருளி, இவ்விவாகப் பொருத்தனையுடன் சம்பந்தப்பட்ட சகலபிரமாணங்களையும், அந்தப்பிரமாணங்களைப் பாதுகாக்கும் கடமையையும் தமது ஞானப்பத்தினியாகிய திருச்சபையிடம் ஒப்பிக்கலானார்.

இவ்வாறு யேசுநாதசுவாமியினால் புதுப்பிக்கப் பெற்றதாகிய விவாகப்பொருத்தனையின் மூலமாக அடையக்கூடிய நன்மைகள் யாவும் சகலருக்கும் கிடைக்கும்படியாக, இவ்விவாகப் பொருத்தனையைப்பற்றி யேசுநாதசுவாமி போதித்துவந்த போதகங்களாகிய ஞானவெளிச்சம் மானிடர் சகலருடையவும் மனசுகளிற் பிரகாசிக்கவேண்டும். கிறீஸ்துவர்களாகிய கணவர் மனைவியர் தேவவரப்பிரசாதத்தின் வலிமையினாற் தங்கள் ஆன்மபெலவீனங்களைப்போக்கி, தங்கள் எண்ணங்களும் கிரியைகளும் கிறீஸ்துநாதருடைய பரிசுத்தபிரமாணங்களுக்குப்பொருத்தமுள்ளவைகளாகச் செய்தலும்வேண்டும். இவ்வகையாகவே இவர்கள் தங்களுக்கும், தங்கள் குடும்பங்களுக்கும் மனச்சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுபவர் ஆவர்.

### கத்தோலிக்க திருச்சபை அரசாங்கத்தை வீழ்த்த முனைந்ததா ?

பிரதமர் பண்டாரநாயகாவின் படுகொலை, திருச்சபையானது அரசாங்கத்தை விழுத்திவிடப் பிரயாசித்த சதிகளில் ஒன்று; கத்தோலிக்க தாதிமாராகும் கன்னியாஸ்திரீகள் பணம் சம்பாதிப்பதிலும், நோயாளிகளைச் சமயம்மாற்றித்திரிவதிலும் நிபுணர்களாகிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுகள் சிலவாரங்களின்முன் நடந்த பாராளுமன்றப் பேச்சுக்களின்போது சில அங்கத்தினரால் சுமத்தப்பட்டதை யறிந்து வருந்தலானோம். பாராளுமன்றத்தில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராய்க் குற்றம்சாட்டுவது, இலங்கையில் புதியதோர் நோயன்று. குற்றம் சுமத்தும் ஆர்வம், குற்றத்தை எண்பிப்பதில் காணக்கிடக்கவில்லையே.

---

### கத்தோலிக்க கன்னியர்கள் வானொலிநிலையத்தை நடத்தலாம்

ஐக்கியஅமெரிக்கதேச ஒகியோ மாகாணத்தைச்சேர்ந்த சின்சினாத்திநகர தருமகன்னியாஸ்திரிகள் சங்கீதம், செய்திகள், பொது விஷயங்கள், ஆலோசனைகள், வியாபாரவிஷயங்களைக்கொண்டதாய் மணிக்கூட்டுச் சுழற்சிபோலத் தொடர்பாக அமைந்த வானொலிஸ்தாபனத்தை அமைக்க ஐக்கியஅமெரிக்க அரசாங்கத்திடம் உத்தரவுகேட்டுள்ளனர். இந்தக் கன்னியர்சபை பீற்றேர்ஸ்பேக்கில் 2,70,000 ரூபா செலவில் ஒருவானொலிநிலையத்தை அமைக்கத் தீர்மானித்துள்ளது. அதன் முயற்சி பலன் அளிக்குமானால் தருமகன்னியர் சபையே முதல்முதலாகச்சொந்த வானொலிநிலையத்தோடு இயங்கும் முதல்சபையாக இருக்கும். பல கத்தோலிக்க துறவிகள் சபை இந்தத்தொண்டைச் செய்துவருகின்றது.

---

### 12-ம் பத்திநாத பாப்பானவர் தமது மரணத்தை இருநாட்களுக்கு முன்னரே அறிந்திருந்தார்

வத்திக்கான் இராச்சிய மந்திரியாரானகருதினால் ரார்டினி ஆண்டவர் சமீபத்தில் பேசியபோது, 12-ம்பத்திநாத பாப்பானவர் தாம் மரணிக்கப்போவதாக இருதினங்களுக்குமுன்னரே அறிந்திருந்தாரெனக் கூறியிருக்கிறார். தாம்சடுதியாக மரணிப்பார்என்றும், அதனால், தமதுமரணத்துக்கு ஆயத்தப்படுத்த ஒருநாள்தர வேண்டுமென்று தேவனை மன்றாடியிருந்தாரென்றும் அவர்தம்மோடு நெருங்கிப் பழகியவர்களிடம் மூன்றுவருடங்களுக்கு முன்னரேகூறியிருந்தார். கடந்த ஆண்டு ஐப்பசிமாதம் 7-ம்திகதியன்று "இதுவே நாம்முன்னர் குறிப்பிட்டநாள்"என்று முன்பு தமது மரணத்தைப்பற்றிக்கூறிய அதேகருதினாலிடம் கூறினார் காலஞ்சென்ற பாப்பானவர் என்று கருதினால் ரார்டினி ஆண்டவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

# மீண்டும் கம்யூனிஸ்தரின்......

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

விடுத்தஅறிக்கையில் தீபேத்துச் சம்பவங்கள்பற்றிய உண்மைகளை அப்படியே அம்பலாக்கியுள்ளார். அதைக்கீழேதருகிறோம்.

[ ' தலாய்லாமா என்றமுறையில் என்னுடைய அந்தஸ்தையும், கௌரவத்தையும், எனக்குரிய அதிகாரத்தையும் பாதுகாப்பதாக உறுதியளித்திருந்தபோதும், தங்களுக்குக்கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பிரயோகித்து மக்களிடையே பிளவுகளை உண்டு பண்ணி, எனது அதிகாரத்தைத் தகர்த்தெறியமுனைந்துவந்தனர். நேர்மையாகவும், கடமையுணர்ச்சியுடனும் உழைத்தனர் என்ற காரணத்தினுல் — தீபேத்தை அநீதியாக அபரிக்கமுயலும் சீனக் கம்யூனிஸ்த அரசாங்கத்தைப் பலமாக எதிர்த்தனர் என்ற காரணத்தினுல் — எனது பிரதமர்களுக்கு விசாரணையின்றிக் கொலைத்தண்டனை விதிக்கப்போவதாகப் பயமுறுத்திவந்ததை யிட்டு அந்தக்கொடியதண்டனை அவர்களுக்கு நேரக்கூடாது என்றுகருதி அவர்களை நான் பதவியிலிருந்து நீக்கினேன். ஒப்பந்தத்தின்படி நடைமுறையிலே எதுவும் செய்யாது அதற்குமுற்றிலும் நேர்மாறுன கொள்கைகளைக் கடைப்பிடித்து வரலாயினர். பின்னர் இவைகள் தீபேத்தின்சரித்திரத்திலே என்றும் கண்டிராதபயங்கர ஆட்சி தலைதூக்குவதற்குக் காரணமாயின. மக்களைப் பலவந்தமாகக் கட்டாய வேலைக்கு உட்படுத்தினர். பயமுறுத்தலின்பேரில் அரசியல் இரகசியங்கள் கண்டறியப்பட்டன. உடைமைகள் கொள்ளையிடப்பட்டன. சொத்துகள்பறிமுதலாக்கப்பட்டன. திட்டமிட்டு மக்கள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். பலபுத்தகுருமாரின் ஆச்சிரமங்கள் அபகரிக்கப்பட்டன. தீபேத்தின் பிரபலதலைவர்களிற்பலர் படுகொலைசெய்யப்பட்டனர். இவைகளே தீபேத்தில் சீனக்கம்யூனிஸ்த அரசாங்கத்தின் பெருமைக்குரிய சாதனைகளாகும்." ]

தீபேத்திலிருந்து இந்தியாவுக்கு ஓடிவந்த 30,000பேருக்கு அதிகமானஅகதிகள் தலாய்லாமாவின் இந்தஅறிக்கைக்குச் சாட்சிபகர்கின்றனர். இவ்வகதிகள் எதிர்ப்புப்புரட்சிக்காரர் என்று சீனவினுல் குற்றஞ்சாட்டப்பட்டதீபேத்தியமக்கள்அல்ல என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. கம்யூனிஸ்தரின் கொடுங்கோலாட்சிக்கஞ்சி ஓடிவந்த வறிய சனங்கள்தான் இவர்கள். தீபேத்தில் புத்த பிக்குகள் அநியாயமாகக் கொல்லப்பட்டதற்கும், கொடிய ஆகாயத் தாக்குதல்களுக்கும், பொதுமக்கள் அநியாயமாகக்கொல்லப்பட்டதற்கும் தீபேத்தியஅகதிகள் சாட்சியமாயிருக்கிருர்கள். தங்கள் சொந்தநாட்டிற்கும், கலாசாரத்திற்கும் மாருகப் புரட்சிசெய்து ஒரே 'சிவப்பு'மயமாக்கப்படுவதற்காகத் தீபேத்திலிருந்து 20,000குழந்தைகள் பலாத்காரமாகச் சீனுவுக்குக் கடத்திச் செல்லப்பட்டனர்.

தீபேத்தின்பயங்கர ஆட்சி பற்றிச் சீனமாகாணமொன்றின் முன்னைநாள் கவர்னர் ஒருவர் பயங்கரத்துக்குரிய செய்தியொன்றைச் சமீபத்திலே இந்தியாவில் வெளியிட்டிருந்தார். "1956-ம் ஆண்டு சீனஅரசாங்கம் 'சோஷலிசப்பாதை' என்னும் தனது கொள்கைகளை வெளியிட்ட பின்னர் புத்தகுருமாரின் ஆச்சிரமங்களைத் தாக்குவதில் முதன்முதல் ஈடுபட்டிருந்தது. 1956-ம் ஆண்டு மிகவும் கொடியமயிர்க்கூர்ச்செறியக்கூடிய சம்பவம் நிகழ்ந்தது. பேயாக்கொம்பா என்னும் இடத்திலுள்ள கீர்த்திவாய்ந்தபௌத்த ஆச்சிரமத்திலேதான் இதுசம்பவித்தது. 1,500 புத்தகுருக்களைக்கொண்ட இவ்வாச்சிரமத்தின் தலைவரான டானுடேசர்லாமாவை நிர்வாணமாக்கிக் கயிற்ருல் வரிந்துமலைச் சாரலில் இழுத்துச் சென்றனர். அதனுல் அவரது உடல் தாறுமாருகக் கிழிபட்டு மிகவும் பரிதாபமாக உயிர்நீத்தார். மக்கள்இவர்மேல் அதிநம்பிக்கைவைத்திருந்ததினுல் அவரது அடிச்சுவடுகளைத் தாங்கிநின்றமண்ணை மிகவும்பூச்சியமாக வைத்திருக்கிருர்கள்.

பாப்பொங் என்னும் இடத்தில் இருந்த 1,700பௌத்தகுருமாரைக்கொண்ட ஆச்சிரமத்தலைவரான வொங்யால் நயீபோக்கிஎன்பவரையும் 28 நாட்களாக விலங்கிட்டுவைத்திருந்தனர். இதன் காரணமாக அவருடைய மணிக்கட்டுத் தசைகள் கிழிபட்டுக் கைஎலும்புகள் வெளியே தெரிந்தன. தற்பொழுது பாதன் என்னும் இடத்தில் இந்தப்புத்தகுரு இருக்கிருர். அவருடைய கைகளிலே இந்தக்காயங்களைக் காணலாம்.

நமது இலங்கைக் கம்யூனிஸ்த கட்சி தீபேத்தியசம்பவங்கள் பற்றி— இந்தியாவிலும், லாவோசிலும் நடைபெறும் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புகளையும்பற்றித் தங்களுக்கு ஒன்றுந்தெரியாது என்று கூறமுடியுமா? இன்றுதீபேத்தில் நடப்பது நாளை இலங்கையில் ஏன்நடக்கக்கூடாது?

— 'துறவி'

# கம்யூனிஸம்

"ஜெயா"

இன்றைய சமுதாய அடிப்படையில் வாழும் மக்களில் ஒருபகுதியினர் தாங்கள் செய்யும் தீமைகளை மறைக்கும் பொருட்டு மற்றைய மக்களைப்பார்த்து "நீங்கள் தீயவர்கள்" என்று குற்றம் பாரிக்கின்ருர்கள். இப்படிப்பட்ட வொய்ப்பிரசாரம் செய்துவரும் அப்பகுதியினர்தான் "பொதுவுடைமையாளர்" என்று கூறப்படும் கம்யூனிஸ்தர்கள். சுருங்கக்கூறின் இவர்கள் வேறுயாரும்அல்ல. ஆட்டுத்தோல் போர்த்து மந்தையோடு மந்தையாய் மேய்ந்துதிரியும் சிறுத்தைகள். இவர்களைப்பற்றி மக்களுக்கு ஓர்சிறு எச்சரிக்கை!

பொதுவுடைமையின் ஒரே இலக்கு மதம். மனிதனை நல்வழிக்குக் கொண்டுவரும் ஒரேவழிகாட்டி மதம். இந்த மதம் என்னும் கோட்டையைத் தகர்த்தெறிந்துவிட்டால் பின்னர் கேட்கவாவேண்டும்? இதை அவர்கள் வெற்றிகரமாகச் செய்துமுடிப்பதற்காக முந்தமுந்த உலகமக்களை இரு பகுதியினராகப் பிரிக்கின்ருர்கள். அவற்றிலே ஒருபகுதியில் ஏழைகள். மறுபகுதியில் செல்வந்தர்கள். ஏழைகளைநோக்கி: "அன்பர்களே! அதோ எதிரில்நிற்கும் அச் செல்வந்தன்தான் நமது வறுமைக்குக் காரணம்; அவனுடைய செல்வங்கள் அனைத்தையும் நாம் கைப்பற்றவேண்டும்; நமக்குக் கிடைக்கும் அத்தனையும் உங்கள் முன்னிலையில் சமபங்குகளாகப் பிரிக்கப்படும்" என்று ஆசைவார்த்தை கூறி, ஆவேசத்தையூட்டி, பொருமை என்னும் மதுவிலே அவர்களை மயங்கச் செய்கின்ருர்கள். இந்தமதுவினுல் மதிமயங்கிய மதிகெட்ட மனிதர் சிலர் "அரசியற்புரட்சி" என்னும் ஆயுதத்தினுல் ஜனநாயக ஆட்சியை நசுக்கிச் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த உதவுகின்றனர். இந்தஆட்சி ஏற்பட்டுவிட்டால் பின்னர் பேசவும்வேண்டுமா?

ஒருவனே தலைவன். அவனிடமே சட்டம். மறுத்தால் பட்டினி அல்லது மரணம். பாவம், புண்ணியம், தருமம், அதர்மம் என்ற சொற்களுக்கே அவனுடைய ஆட்சியில் இடமில்லை. நாட்டிலே அவனுடைய கட்சிக்குச் சகல உரிமைகளும் உண்டு. ஆனுல், அவன் ஆளும்மக்கள் அவற்றை நினைத்துப்பார்க்கவும் முடியாது.

கம்யூனிஸ்தர்கள் தங்கள் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக்கட்டி விட்டதாகத் தம்பட்டம் அடித்துக்கொள்கிருர்கள். இதில் அவர்கள் பெருமையடையவேண்டிய காரணமேயில்லை. ஏனெனில், தங்கள் சர்வாதிகார ஆதிக்கத்தின்மூலம் எந்த ஒருதொழிலாளியும் தனக்குக் கொடுக்கப்படும் வேலையை அவன் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். அன்றேல் இருக்கவே இருக்கிறது சுழல்துப்பாக்கி.

கம்யூனிஸ்தர்களின் ஆட்சியில் நீதி என்பது என்ருே இறந்துவிட்டது. அந்தஆட்சியில் மனிதன் ஏன்வாழ்கின்ருன் என்பதை நினைக்க அவனுக்கு நேரம் இல்லை. இருகைகளும், ஒரு வயிறும் உள்ளவனுக மனிதன் வாழ்ந்தால்போதும். சுருங்கக்கூறின் கட்சியின் முன்னேற்றத்துக்காக அவன் உழைத்தாலே போதும். தன் ஆத்துமத்தைப்பற்றிச் சிந்திக்கவோ, அதனைப் பரிசோதிக்கவோ அவனுக்கு நேரமும் இல்லை; சந்தர்ப்பமும்இல்லை. அத்தனை தடையுத்தரவுகள். இந்த அடிமை வாழ்விலே அவனது சித்தம் சங்கிலிகளால் கட்டப்பட்டுள்ளது. நன்மை எது? தீமை எது? என்பதை அவன் உணரமுடியாது.

சர்வாதிகாரம் வேரூன்றிப் பதிந்துவிட்டதுதான் தாமதம் கம்யூனிஸ்தர்கள் மதத்தைப்பற்றிப்பேசத்தொடங்குவார்கள். தங்கள் ஆட்சியிலே நிலைகொள்ளுமட்டும் அவர்கள் மதவிஷயமாய் எதுவுமே பேசமாட்டார்கள். அப்புறம் வெறிகொண்ட மதியீனர்களாய் அவர்கள் புலம்பத் தொடங்குவார்கள்.

"மதம் மதுவைப்போன்றது; மக்கள் அம்மதுவை அருந்தாவண்ணம் தடுப்பது எங்கள் கடமை" என்கிருர் காள்மாக்ஸ்.

"பொதுவுடைமை அநாத்மவாதம்; ஆகவே, அது மதத்தின் எதிரி" என்கின்ருன் லெனின்.

"மதமும், சாஸ்திரமும் இணக்கமற்ற இருபிரிவுகள்; கம்யூனிஸ்த நாடுகள் சாஸ்திரத்தை வளர்க்கப் பாடுபடுகின்றன; ஆகவே, மதத்திற்கும், சாஸ்திரத்துக்கும் வெகுதூரம்" என்கிருர் ஸ்ராலின்.

"நாங்கள் நாஸ்திகர்; மதம்என்னும் மதுவினுல் மயங்கிக்கிடக்கும் ஒரு பகுதிமக்களை எம்வழிக்குக் கொண்டுவர எங்களால் இயன்றவரை தெண்டிப்போம்" என்கிருர் குருஷேவ்.

வாய்ப்பேச்சோடு விஷயம் முடியவில்லை. தன்னைப்படைத்த கடவுளைத் தன்னும் மனிதன்வணங்கும் சுதந்திரந்தானும் அவனிடமிருந்து கம்யூனிஸ்தரால் பறிக்கப்படுகின்றது. மதத்தை அழிக்க அதுளடுத்துக்கொண்ட குரூரத்தனமான முயற்சிகளால் எத்தனையோ ஆயிரம் குருமார் சுடப்பட்டும், கழுவேற்றப்பட்டும் உயிர்துறந்தனர். நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்டனர். எத்தனையோ கோயில்கள் இடிபட்டுத் தரையோடுதரையாக மறைந்துபோயின. பலகோவில்கள் தானியங்கள் சேகரித்துவைக்கும் பண்டகசாலைகளாக மாறிவிட்டன. படக்காட்சிச் சாலைகளாகத்தானும் மாறிவிட்டன.

மதத்திற்கு எதிரான கம்யூனிஸ்த பிரசாரப் பத்திரிகைகள், துண்டுப்பத்திரங்கள் கோடிக்கணக்கில் அச்சடித்துப் பறக்கவிடப்படுகின்றன. ஆனுல், பாவம்! என்ன பயனைத்தான் கண்டார்களோ? ஒன்று, கடவுள் உண்மையிலே எங்கும் வியாபித்திருக்கின்ருர் என்பதைத்தான் அவர்களது இத்தனை அநீதிகளும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

மக்கள் உணரும்காலம் தூரத்தில் இல்லை. கம்யூனிஸம் மக்களுக்கும், அவர்களின் கடவுள்பக்திக்கும் எதிராகச் செய்துவரும் தீங்குகளின் பலாபலனை அவர்கள் கூடியகெதியில் உணருவார்கள். ஒருவேளை அவர்களது வான்வெளிப் பிரயாணங்கள் தன்னும் கடவுள் எங்கிருக்கின்ருர் என்பதைக் கண்டு பிடிப்பதற்கோ என்னவோ? யார் அறிவார்?

# மகாஞானவொடுக்கம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தூரம் ஒருஅடியென்று தேவவாக்கியம் கூறுகிறது; கழிந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவினுடியும் நம்மை மரணத்தின்வாயிலுக்கே கூட்டிச்செல்கின்றது; மரணத்தின்பயங்கரத்தை அடிக்கடிசிந்திப்பவன் பாவத்தை விலக்கிநடப்பான்; மரணத்தைஎண்ணுபவனின்வாழ்வு புண்ணியபலன்கள் நிறைந்ததாயிருக்கும், எனவே, நித்திய பாக்கியத்தை அடைவதற்கு நிச்சய மானவழி உத்தமவிதமாய்ப் புனிதசீவியம் நடத்துவதேயென்று சுவாமியவர்கள் எடுத்துக்கூறினுர்.

மேலும் "மனிதா! உன்னைநம்பாதே." இவ்வாக்கியம்மூலமாகமனிதபலவீனத்தைத் தேவன் அறிவுறுத்துகிருர். திருச்சபையின் வச்சிரத்தூணுகிய அர்ச். பேதுருவானவரே ஆண்டவரை மறுதலித்தாரெனில், நாம் எம்மாத்திரம்? ஆகவே,நமது சுயபலத்தில் நம்பிக்கைவையாது தேவஉதவியைநாடவேண்டும்; இன்னும்தேவதாயை அண்டுபவர்களை அவ ஒருபோதும் உதறித்தள்ளா; ஆகவே, அவவின்மாசில்லாத இருதயத்துக்கு நம்மைஒப்புக்கொடுத்து அவவுடைய உண்மையானபிள்ளைகளாக வாழ்வோமென இந்தஞானவொடுக்க முடிவிலே நல்லபிரதிக்கினை செய்வோமாகஎன்றும் சுவாமியவர்கள் கூறினுர். முதல் வெள்ளிக்கிழமைமாலை நிந்தைப்பரிகார வைபவமும், முதற்சனிக்கிழமைமாலை தேவதாய்க்கு விசுவாசிகளை ஒப்புக்கொடுக்கும்வைபவமும் பத்தியருட்சியாகநடந்தேறின. ஆராதனைமுடிவில் அவரால் பாப்பாசரின் ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

ம. க. யோட்ஸ்,
பருத்தித்துறை

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதய இரக்கத்தினுலும். பரிசுத்த சதா சகாயமாதாவின் வேண்டுதலினுலும், அர்ச்.யூதாததேயு, சிறியபுஷ்பம், அர்ச்.சவேரியார் இவர்களின் மன்ருட்டாலும் நான் கேட்ட மன்ருட்டுக் கிடைக்கப்பெற்றேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கப் பிந்தியமைக்காக மன்னிப்புக்கேட்டு அவர்கள் உதவியை மேலும்கேட்டு நிற்கிறேன்.

தாவடி அ. பி.



# இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே

மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்கள் உங்கள்மேல் கொண்டிருக்கும் அன்பை உங்கள்பேரால் அவர் 'பாதுகாவல'னில் திறந்திருக்கும் இளைஞர்பக்கம்' தெற்றெனத்தெளிவாய்க் காட்டுகின்றது.

புனிதவீரர் பகுதியானது சிறுவர்களுக்குரிய விஷயங்களையே கொண்டிருக்குமாதலால், அது வயதில்முதிர்ந்த உங்களுக்குப் போதுமானதாய் இராதென்று அவர் கண்டார். எனவே, இப்பக்கத்தில் யெளவன வயசுகொண்ட நீவிர் கண்டு படிக்கவிரும்பும் சிலவற்றைக் கிழமைதோறும் வெளியிட எத்தனித் துள்ளோம். இத்தால் பயன்பெற எவ்வளவு பிரயாசிக்கிறீர்களோ, அவ்வளவாகத் தேவஉதவியும் உங்கட்குக் கிடைக்கும்.

நற்சுகபெலமும், தெளிவுள்ளபுத்தியும், ஆழ்ந்தயோசனையும் கொண்டுள்ள இவ்வயசில் நீவிர் எவ்விதமாய் மற்றோர்க்கு நன்மைசெய்யக் கூடியதாயிருக்குமோ, அவ்விதத்தை நழுவவிடாது கையாடுவது அவசியம். ஆகவே, மற்றோர்க்கும் பயன்பெறக்கூடிய கட்டுரைகள், கதைகள். வினாக்கள் முதலியவை யிருப்பின் அவற்றை எமக்கு அனுப்பிவைத்தால், தகுந்தமுறையில் அவற்றை மற்றோர்க்கும் பயன்படுத்தத் தெண்டிப்போம்.

யேசு, மரி, சூசையில் உங்கள்,
பிதா

—✻—

## இஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின் 26-ம் ஞாயிற்றுக்கிழமை

மத். XXIV 15—35

ஆதலால் தானியேல் தீர்க்கதரிசியால் வசனிக்கப்பட்ட அருவருப்புக்குரிய நாசமானது திருஸ்தலத்தில் நிற்கக்காணும்போது, வாசிக்கிறவன் உணரக்கடவான். அப்போது யூதேயாநாட்டில் இருக்கிறவர்கள் மலைகளுக்குஓடிப்போகக் கடவார்களாக. அரமியத்தில் இருக்கிறவனும் தன் வீட்டிலிருந்து எதையாகிலும் எடுக்கும்படி இறங்காதிருப்பானாக. வயலிலிருக்கிறவனும் தன்வஸ்திரத்தை எடுக்கும்படி திரும்பாதிருப்பானாக. அந்நாட்களில் கெற்பவதிகளுக்கும், பாலூட்டுகிறவர்களுக்கும் ஐயோ கேடு! ஆதலால், நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது நேரிடாதபடிக்குப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில், அப்பொழுது மிகுந்தஉபத்திரவம் உண்டாகும். அவ்வித உபத்திரவம் உலகம் உண்டானநாள்முதல் இந்நாள்மட்டும் இருந்ததுமில்லை, இனி இருக்கப் போவதுமில்லை. அந்நாட்கள் குறைக்கப்பட்டாலொழிய, எந்த மாமிசமும் பிழைக்கமாட்டாது. ஆயினும், தெரிந்துகொள்ளப் பட்டவர்களினிமித்தம் அந்த நாட்கள் குறைக்கப்படும்.

அக்காலத்தில் இதோ கிறீஸ்துநாதர் இங்கேயிருக்கிறூர் அல்லது அங்கேயிருக்கிறூர்என்று யாராவது உங்களுக்குச்சொன்னால் விசுவாசியாதேயுங்கள்.

ஏனெனில், கள்ளக்கிறீஸ்தவர்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பிக் கூடுமாகில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் வஞ்சிக்கும்படியான பெரியஅடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இதோ முன்னதாக உங்களுக்கு அறிவிக்கிறேன். ஆதலால், இதோஅவர் வனாந்தரத்தில் இருக்கிறூர்என்று சொன்னாலும்வெளியேபுறப்படாதிருங்கள். இதோ வீட்டிற்குள்ளே இருக்கிறூர்என்றாலும் விசுவசியாதேயுங்கள்.

ஏனெனில், மின்னலானது கிழக்கில் தோன்றி, மேற்குமட்டாய்ப் பிரகாசிப்பது எப்படியோ, அப்படியே மனுமகனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கேயே கழுகுகளும் வந்துகூடும். அந்நாட்களின் உபத்திரியத்துக்குப் பின்பு உடனே சூரியன்இருள, சந்திரன் தன்னொளி கொடாதிருக்க, நட்சத்திரங்களும் வானத்தினின்றுவிழ, வானத்தின் வல்லமைகள் அதிரும். அப்பொழுது மனுமகனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். பூமியிலுள்ள சகலசாதிசனங்களும் புலம்பி, மனுமகன் வானமண்டலங்களின்மேல் வருவதைக் காண்பார்கள். அப்போது அவர் தம்முடையதூதர்களை எக்காளப் பெருந்தொனியோடு அனுப்புவார்.

அவர்கள் வானத்தின் மேல்முனைமுதல் கடைசிமுனைவரையில் நான்குதிசைகளிலும்இருந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்ப்பார்கள். அத்திமரத்தினின்று ஓர்உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதில் இளந்துளிர் கண்டு, இலைகள் தழைக்கும்போது கோடைகாலம் சமீபித்ததென்று அறிந்திருக்கிறீர்கள். இவ்வண்ணமே, நீங்களும் இவைகளெல்லாவற்றையும் காணும்போது, அவர்சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறூரென்று அறிந்துகொள்ளுங்கள். இவையெல்லாம் நடந்தேறுமளவும் இந்தச்சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும், பூமியும் ஒழிந்துபோம். என்வார்த்தைகளோ ஒழிந்துபோகாது.

### உலகமுடிவின் அறிகுறிகள்

திருச்சபையின் வருஷத்தில்வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை இதுவே. அட்டதரித்திரத்தில் இவ்வுலகிற்கு வந்தருளிய யேசுநாதர், ஓர்நாள் மகிமையுடன் மறுபடியும் வருவார் இந்த இரண்டாம்வருகைக்கு அவரின துமுதலாம் வருகையானது ஆயத்தகிரித்தியமாய் இருந்தது. அவரின் முதல்வருகையின்போது அவரை ஏற்றுக்கொண்டவர்களைத் தமது இரண்டாம் வருகையின்போது அவர்நித்தியமாய் மகிமைப்படுத்துவார். அவரைப் புறக்கணித்தவர்களையோ அவர் நித்தியத்துக்கும் தண்டிப்பார்.

இதுபற்றியே தீர்க்கதரிசிகள் ஆண்டவருடைய இருவருகைகளுக்குமிடையில் அதிகவேற்றுமை காண்பிக்கவில்லை. இரண்டும் ஒன்றோடொன்று அவ்வளவு சம்பந்தப்பட்டிருக்கிறதென்றதுதான் காரணம்.

இதுபோலவே இன்றையசுவிசேஷத்திலேயும் எமதுஆண்டவர் ஜெருசலேம் பட்டினத்தின் அழிவையும், உலகஅழிவையுமிட்டுப் பேசினாலும், இரண்டுக்குமிடையில் அதிக பேதம் காண்பிக்கிறவரායில்லை.

ஏனெனில், அவரது முதலாம்வருகையின்போது அவரைஏற்றுக்கொள்ளாத யூதசாதியாருக்கு இடப்பட்டதண்டனையானது அவருடைய இரண்டாம் வருகையாகிய உலகமுடிவில் பாவிகளுக்கு இடப்படவிருக்கும் நித்தியதீர்வைக்கு அடையாளமாய் இருக்கின்றது. முதலாம் வருகையையும், அதற்குரிய தீர்வையையும் அறிந்திருக்கும் நாம் யேசுநாதருடைய இரண்டாம் வருகைக்குப் பக்தியுடன் ஆயத்தப்படுத்த வேண்டுமென்பதே இன்றைய சுவிசேஷத்தின் படிப்பனை.

வாலிபருக்கு ஓர்வழிகாட்டி

## சத்தியவேத இயக்கத்தில் ஈடுபட்ட பெஞ்சமின் என்பவரின் சீவியவரலாறு

—I—

### பாலியப் பருவம்

சிலகாலம் நம்முடைய வாலிபர்களுக்குளெல்லாம் ஒருநல்ல வழிகாட்டியாயிருந்து நடுவயதிற் தமது சம்பாவனையை அடையப்போனவரான பெஞ்சமின் என்பவர், வட இலங்கைத் தலைநகரமாகிய யாழ்ப்பாணப்பட்டினத்தில் உத்தமகத்தோலிக்கராகிய சவிரிமுத்துவுக்கும், பிரான்சீஸ்காவுக்கும் புத்திரனாக 1875-ம்ஆண்டு ஆடிமாதம் 5-ந்திகதி பிறந்தார். இவருடைய பெற்றோர் பொருட்செல்வத்தில் குறைந்தவர்களானபோதிலும் தேவபக்தி என்கிற அருட்செல்வத்தில் மிகுந்தவர்களாயிருந்தபடியால், தங்களுக்கு இயல்பாயுள்ள முயற்சியாலும், உழைப்பாலும் ஆண்கள் இருவரும, பெண்கள் மூவருமாகிய தங்கள் ஐந்து உதாக்கனிகளையும் திடகாத்திரமும், உறுதியான தேவபக்தியுமுள்ளவர்களாக வளர்த்து வந்தார்கள். எல்லாத்திலும் மேலாய் ஆத்தும அலுவல்களையும், வேத வழிபாடுகளையும் மதித்துநடக்கும்படி தங்கள் பிள்ளைகளைச் சிறுவயது தொடங்கிப் பழக்கிவருவார்கள்.

ஆண்மக்கள் இருவரும் தங்கள் விசாரணைப்பங்கிலுள்ள பாடசாலையில் சிறிதுகாலம் கல்விபயின்றபின், ஒரு தொழிற்சாலையிலே "சுருட்டு" வேலையில் நிறுத்தப்பட்டார்கள். யாழ்ப்பாணப் பட்டினத்திலும், நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் சுருட்டுத்தொழிலால் பிழைத்து வருவதை நாம் அறிவோமே.

"வாழும்பிள்ளையை மண்விளையாட்டிலே தெரியும்" என்ற பான்மையாய்ப் பெஞ்சமின் பள்ளிக்கூடத்திற் படிக்கும் நாட்களிலேதானே தன்தரவழிப் பையன்களுக்கு ஓர் மேல்வரிச்சட்டம் போல இருந்தாரென்று இவருடைய பள்ளித்தோழர்கள்மூலம் அறிகிறோம்.

இவருடைய அனுதாபசிந்தையும், அமிர்த குணமும் எல்லாருடைய மனதையும் இவர்பக்கமாய்க் கவர்ந்து கொண்டிருந்தன. பெஞ்சமின் ஆழமான யோசனையும், கருமங்களை உள்ளபடி மதிக்கத்தக்க விமரிசையும் உள்ளவர். இந்த நல்ல குணங்களுள்ளவர் விளையாட்டுகளிலேயும வெகு சமர்த்தனைபடியால், இவருடைய தோழமையை அநேகர் தேடிவருவார்கள்.

இவருடைய சகோதரரான கபிரியேற்பிள்ளையோ வேறொருபோக்குள்ளவர். அவருக்கு விளையாட்டுகளிற் பிரீதியில்லை, அவர் விளையாட்டுத் தோழர்களைத் தேடுவதில்லை. அடக்கமான ஓர்இடத்தில் ஒதுங்கிப் புத்தகங்களைப் படிப்பதையே தமக்கு மகா இன்பமாகக் கொள்ளுவார். நடுத்தரவழிக்கு மேற்பட்ட புத்தி சாதுரியமுடையவர். பாட்டு இயற்றுவதில் இயற்கையான ஒருமனச்சார்பு உள்ளவர். அவருடைய கீர்த்தனங்கள் பல அச்சிடப்பட்டு, ஊரெங்கும் அதிக பிரீதியோடு படிக்கப்பட்டுவந்தன.

அவரும் பிற்காலத்திலே சமுசார அந்தஸ்தில் புகுந்தபின் அர்ச். சூசையப்பர்கூட்டத்தின் "முதிய அங்கத்தவர்" என்ற பிரிவில் சேர்ந்து, மரணமட்டும் நிலையாயிருந்ததுமன்றித் தமது குடும்பத்துக்கு நல்லெசமானகவும், ஓர் உத்தமகத்தோலிக்கனகவும் விளங்கியிருந்தார்.

பெஞ்சமினுடையபோக்கு வேறென்றோம். இவர் இயற்கையாகச், சுகதேகியும், தைரியசாலியுமா யிருந்தபடியால் சரீர அப்பியாச விளையாட்டுகளிலேயே இவருக்கு அதிகவிருப்பம். ஆனதுபற்றித் தமது போக்குடைய வேறுசிலருடன் தோழமைகொண்டு சிலம்படிக்கூட்டமொன்று அமைத்து, ஒழிவான நேரங்களிலெல்லாம் சிலம்படி பழகியும், பழக்கியும் வருவார்.

(தொடரும்)

## மகா ஞானவொடுக்கம்

### பருத்தித்துறை

நிகழும்கார்த்திகைமாதம் 1-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வண. சற். என். குறூஸ்சுவாமியவர்களால் இங்கு ஒரு மகாஞானவொடுக்கம் ஆரம்பிக்கப்பட்டுக் காலையும்மாலையும் போதகங்கள் நடைபெறலாயின. காலையில்முதலாம் பூசை முடிந்தபின்னரும், மாலைதிவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துக்குமுன்னரும் பிரசங்கங்கள்செய்யப்பட்டன. முதலாம்நாள் சகலஅர்ச்சியசிட்டர்களின் திருநாளாயிருந்ததினால் அவர்களின்புனிதவாழ்க்கைபற்றியும், உலகின்பாவாக்கிரமங்களால்வரக்கூடிய தேவகோபதண்டனைபற்றியும் அழகாகவும், அச்சமுண்டாகக்கூடிய விதமாகவும் எடுத்தியம்பினார் ஞானவொடுக்க போதகரான குருவரவர்கள்.

தேவனின்சாயலாகப் படைக்கப்பட்டநாம் அவர் நமக்குத்தந்த அழியாத ஆத்துமத்தை இரட்சிக்க வழிவகை தேடவேண்டும், ஆத்துமஇரட்சணியத்தையே இலட்சியமாகக்கொண்டு ஒவ்வொருவினாடியும் அதற்கானகாரியங்களையே கருத்தாகக் கையாளவேண்டும், அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல் "அச்சத்துடனும், நடுக்கத்துடனும் ஆத்துமகாரியத்தை நாம்மேற்கொள்ளவேண்டும்," தன்சீவியகாலத்தில் தன்னைத் திருத்திக்கொள்ளாதவன் மரணத்தருவாயில் தன்னைத் திருத்திக்கொள்ள மாட்டான், ஏனெனில், சீவியம்எப்படியோ மரணமும்அப்படியே, ஆகவே, நாமெல்லாம் கடவுள் நமக்குத்தந்த ஆத்துமத்தைப்பற்றி மரணத்தருவாயில் அவருக்குக் கணக்குக்கொடுக்க வேண்டியவர்களாயிருப்பதால் அச்சத்துடனே நமது ஆத்தும இரட்சணியத்திற்கான வேலைகளைச் செய்வோமாக என்று தமது ஆரம்ப பிரசங்கத்தில் குறிப்பிட்டார் சுவாமியவர்கள்.

2-ந்திகதியன்றுமாலை சவக்காலையில் சுவாமியவர்கள் செய்தபிரசங்கத்திலே, "மனிதா! நீ மண்ணாய்இருக்கிறூய், திரும்பவும் மண்ணாய்ப்போவாய்," இவ்வாக்கியத்தைப் பரிசுத்தமாதாவாகிய திருச்சபை ஒவ்வோர்வருடமும் நமக்கு விபூதித்திருநாளிலே மந்திரிக்கப்படும் சாம்பல்மூலம் அறிவுறுத்துகிறது; ஆம், மண்ணால்உண்டாக்கப்பட்ட நாம் திரும்பவும் மண்ணாய்ப் போவோம்; எமது வாணாளில் ஒவ்வொருநாளும் நாம் மரணத்தைநோக்கியே செல்லுகிறோம்; அதனால்தான் நமக்கும், மரணத்திற்கும் இடைத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# புனிதவீரர் பக்கம்

அருமைச் சகோதரங்களே!

நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதப் பதக்கத்தை உங்கள்கழுத்திலே அணிந்திருக்கிறீர்களா? இல்லையெனில், அற்புதப் பதக்கத்தின் திருநாளாகிய அடுத்துவரும் 27-11-59-ந் திகதி நீங்கள் எல்லோரும் அதைப் பெற்றுப் பூச்சியமாய் அணிந்துகொள்ளுங்கள். அது உங்களை எப்பொழுதும் தேவதாயாரின் — 'அருட்செல்வியின்' அடைக்கலத்திலே பாதுகாத்துவரும். அற்புதப் பதக்கத்தின் வரலாற்றைக் கீழ்வரும் கட்டுரையை வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.

அண்ணா

## ஜெரமி மார்ட்டினஸ்

"பீற்றேஸ்பேர்க்"என்னும் நகரத்திலே பிரபுவம்சத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் சீவித்து வந்தார்கள். இக்குடும்பத்தின் தலைவன் "பற்ருேனியா"ப் பிரபுவாகும். இவனுடைய மனைவி ருஷியப் பெண். "ஜெரமி மார்ட்டினஸ் என்பவன் இக்குடும்பத்திலுள்ள ஒரேபிள்ளை. இவர்கள் பீற்றேஸ்பேர்க்நகரத்திலே அலங்காரமாய் அமைக்கப்பட்ட ஒருமாளிகையிலே வாழ்ந்துவந்தார்கள். பற்ருேனியாக் குடும்பம் தங்கள்மகன் எதிர்காலத்தில் ஒருபெரிய அரசியல்வாதியாகவும், பட்டதாரியாகவும் வருவானென்று நினைத்து அவனை இங்கிலாந்திலுள்ள உயர்தர கலாசாலையில் சேர்த்துவிட்டது. அவன் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன்.

ஜெரமி மார்ட்டினஸுக்குப் பற்பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாயினர். இவன் அறிவறிந்த நாளிலிருந்தே பழைய ரூமைத் தேவர்களை வழிபட்டுவந்தான். அத்துடன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த நண்பர்களையும், அவர்களுடைய சமயத்தையும் அவமானப் படுத்திவந்தான். என்ருலும், கத்தோலிக்கராகியநண்பர்கள் கிறீஸ்துநாதரையும், தேவதாயாரையும் பற்றிப் பலதடவைகள் அவனுக்கு எடுத்துரைத்தார்கள். நாட்கள்பல சென்றன. ஒருநாள் இவனுக்குக் கத்தோலிக்க சமயத்தைப் பற்றிய புஸ்தகம்ஒன்று கிடைத்தது. இவன் அதைப் படித்துப்பார்த்தான். அதைப் படித்தபின் அவனுடைய மனம் தடுமாற்றமடைந்தது அதனுல், இன்னும் பல புஸ்தகங்களைத் தேடிப்படிக்கத் தொடங்கினுன். வரவர அவனுடைய மூளையும், மனமும் சுத்தமடைந்தன. தான் இவ்வளவு காலமும் அனுசரித்து வந்த வேதம் பொய்யென்றும், சர்வேசுரன் ஒருவர் மாத்திரமே உண்மையென்றும் ஏற்றுக்கொண்டான். இப்பொழுது அவனுடைய ஒரே ஆசை கத்தோலிக்கனுவதே. அதனுல், அவன் கத்தோலிக சமயத்தைப்பற்றி அறிவதிலே கண்ணுயினுன். சிலகாலத்தின்பின் ஞானஸ்நானமும், தேவநற்கருணையும் பெற்ருன். இப்பொழுது அவனுடைய ஒரே ஆசை படிப்பு முடிந்ததும் ஓர் குருப்பிரசாதியாவதே.

பல மாதங்களின்பின் பரீட்சைப் பேறு வெளியாயிற்று. ஜெரமி எம். ஏ., எல் எல். டி. என்னும் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றிருந்தான். மூன்று கிழமைகளின்பின் தான் பிறந்த நகரத்திற்குச் சென்ருன். பெற்ருேர்கள் அவனைப் பெரும் ஆவலுடன் வரவேற்றனர். ஜெரமியுடையகட்டத்தையிற் காணப்பட்ட மாற்றம் பெற்ருேருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. முன்போல அவன் தேவர்களுக்குப் பலிசெலுத்தவில்லை. அதற்குமாருக சர்வேசுரனையும், தேவதாயாரையும் நினைவுகூர்ந்துவந்தான். தேவதாயாரையே அதிகமாக நேசித்தான். இக்காரணங்களினுல் பெற்ருேர் அவனுக்கு விவாகம் செய்துவைக்கும்படியாக அவனுடைய விருப்பத்தைக் கேட்டார்கள்.

அதற்கு அவன், "நான் விவாகம் செய்யமாட்டேன்; நான் உங்களுடைய பொய்வேதத்தை மறந்துவிட்டேன்; இப்பொழுது நான் ஓர் கத்தோலிக்கன்; தயவுசெய்து நான் குருப்பிரசாதியாவதற்கு எனக்கு விடைதாருங்கள்" என்று கேட்டு நின்ருன்.

இதனுல் கோபங்கொண்ட பிரபு "நீ எங்களுடையதேவர்களை அவமானப்படுத்துகிருய்" என்று சொல்லி அங்கிருந்த வெள்ளிப்பாத்திரம் ஒன்ருல் அவன் மண்டையில்அடிக்க, ஜெரமி இரத்தம்சிந்த நிலத்தில் விழுந்தான். இக்காட்சியைக் காணச் சகியாது மேல்மாடிக்குச் சென்று கதவை மூடிக்கொண்டார் பிரபு. வேலையாட்கள் ஜெரமியை அவனுடைய அறைக்குக் கொண்டுசென்று ஓர் மெத்தையில் வளர்த்தினுர்கள். உடனேதானே குடும்பவைத்தியரை வரவழைத்தார்கள். வைத்தியர் பரீட்சித்துப்பார்த்து, உயிர்பிழைப்பது நம்பிக்கையற்றதாய் இருக்கிறதென்று சொன்னுர்.

சிறிது நேரத்தின்பின் தனக்கு நினைவுவந்தபொழுது அவன் குருவானவரை வரவழைத்து நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து கடைசி முறையாகத் தேவநற்கருணை பெற்றுக்கொண்டான் அதன்பின் தன் தகப்பனை அழைத்து, "பிதாவே! நான் உங்களை மன்னிக்கிறேன்; ஒருநாள் பரலோகத்தில் உங்களைக் காண நான் ஆசையாயிருக்கிறேன்" என்று சொல்லிக் கண்களை மேலே உயர்த்தித் தன்னெதிரேயிருந்த தேவதாயாரின் படத்தைப் பார்த்துத் தனது கரங்களை நீட்டி, "அதோ, தேவதாய்வருகிருள்; அம்மா! அவ என்னைப் பார்த்துச் சிரிக்கிருள்" என்று சொல்லிக் கண்களை மூடித் தேவதாயாரின் அரவணைப்பிலே தனது பூலோக சீவியத்திற்கு முற்றுப்புள்ளிவைத்தான். தாயுடைய அழுகையினுல் முழுவீடும் நிறைந்தது. கொலைசெய்த தகப்பனும் சோகமே உருவாய் நின்ருர்.

மறுநாள் இந்த வாலிபனுடைய ஈமச்சடங்குகள் அதிக மரியாதையுடன் திருச்சபையின் முறைமைப் பிரகாரம் செய்யப்பட்டன. இரு கிழமைகளின் பின் பற்ருேனியாக் குடும்பத்தினர் தங்களுடைய பொய்வேதத்தைக் கைவிட்டுக் கத்தோலிக்க வேதத்தைக் கைக்கொண்டு உண்மை மறையின் உத்தம மக்களாயினர்.

## அருட்செல்வியின் அற்புதப்பதக்கம்

1830-ம் ஆண்டு பிரான்ஸ்தேசத்திலே அர்ச் வின்சென்ற் டி போல் ஸ்தாபித்த கன்னிகாசபையின் கன்னியாஸ்திரியான கத்தறீன் லபுறே என்பவளுக்குத் தேவதாயார் காட்சி கொடுத்து ஓர் அற்புதப் பதக்கத்தைக் கொடுத்தருளினுர். அந்த அற்புதப் பதக்கத்தின் ஒரு பக்கத்திலே மாசில்லாத மாதா தமது கரங்களைக் கீழ்நோக்கி விரித்த மேரையாயும், அவவுடைய கரங்களிலிருந்து ஒளிக்கதிர்கள் பூமியை நோக்கி வரும் பாவனையாயும் சாயல்பதிந்திருந்தது. அதன் கரைகளிலே மாசில்லாமல் உற்பவித்த மரியாயே! உமது அடைக்கலத்தை நாடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன.

மறுபக்கத்தில் தேவதாயாரது மாசில்லாத இருதயமும், யேசுவின் திருஇருதயமும் பதிந்திருந்தன. அவற்றிற்குமேலாக M என்ற எழுத்தும், ஒரு சிலுவையும் வரையப்பட்டிருந்தன. இந்தப் பதக்கத்தை இக்கன்னியாஸ்திரிக்குக் கொடுத்து அதை உலகமடங்கலும் பரப்பும்படி கேட்டிருந்தார் தேவதாயார். இதைப் பக்தியாய் அணிந்திருப்பவர்களைத் தாம் விசேஷவிதமாய் ஆசீர்வதிப்பதாயும், அவர்களது ஆத்துமமும், சரீரமும் அற்புதமாய்க் காப்பாற்றப்படுமென்றும், அவர்களுக்குத் தமது பாதுகாவல் எப்போதும் கிடைக்குமென்றும் தேவதாயார் கூறியுள்ளார்.

இப்பதக்கமானது வெகு துரிதமாய்ப் பரவியதிலிருந்தே இது அற்புதமாய் அருளப்பட்டதன் உண்மை விளங்கியது. மேலும், இந்தப் பதக்கத்தின்உதவியால் மக்கள் அடைந்துவரும் நன்மைகள் அளவில. இந்தப் பதக்கத்தை அணிந்த அல்போன்ஸோ என்னும் யூதன்ஒருவன் மனந்திரும்பினுன் என்பதும் இதன் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். எனவே, கத்தோலிக்கர் அனைவரும் இதைப் பத்தியாய்த் தரித்துக் கொள்வதால் தமது ஆத்துமத்தைப் பரிசுத்தமாய்க் காப்பாற்றலாம். தேவதாயார் கொடுத்த இந்த அற்புதப் பதக்கம் பசாசை எதிர்த்துப் போராடுவதற்கு எமக்குச் சிறந்த ஒரு கேடயமாகும் இந்த அற்புதப் பதக்கத்தின் திருநாள் இம்மாதம் 27-ந் திகதி வருகின்றது.

சிறுவர்களே! அன்றைய தினம் நீங்கள் இந்தப்பதக்கத்தைப் பெற்று என்றும் — உங்கள் மரணபரியந்தம் தரித்துக்கொள்ளத் தீர்மானஞ் செய்துகொள்ளுங்கள்.

---

## இருசொல் அலங்காரம்

இருபொருட்பட ஒரே சொல்லால் வியக்கப்படுவது இரு சொல் அலங்காரமாம். இருவெவ்வேறு பொருள் குறிக்கும் வினுக்களுக்கு ஒரு சொல்லிலே, இன்றேல் இரு சொற்களால் பொருத்தமான விடைகாணவேண்டும். மேலும்வினுக்கள் படிப்பதற்கு மிக எளிதாயும், இலகுவாயும் சிந்தனைக்குரியதாயும் இருக்கின்றன கீழே வரும் இருசொல் அலங்காரங்களுக்கு விடை கண்டுபிடியுங்கள் பார்ப்போம். சரியானவிடைகளை அஞ்சல் அட்டையில் எழுதி 24-11-59 இல் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். சரியான விடையும், சரியான விடை அனுப்பியவர்களின்பெயரும் அடுத்த வாரம் இப்பக்கத்தில் பிரசுரிக்கப்படும். விடைகள் அண்ணுவுக்கே அனுப்பப்பட வேண்டும்.

1. சத்தியமறையின் பெயரேது?
   சற்குணம்பூக்கும் மலரேது?
2. நல்லார்நாட்டம் செல்வதெதில்?
   நாதன்யேசு இருப்பதெதில்?
3. எருமைக்கன்று சாவதெதால்?
   எருக்கிலைபழுத்து விழுவதெதால்?
4. பாம்பு ஓடுவதேன்?
   பாழ்ங்கிணறு இடிவதேன்?
5. திங்கள் வருவதேன்?
   திருவிளக் கேற்றுவதேன்?

அ. ம. யோ. பெர்ணுண்டோ,
கொழும்பு.

## நத்தால் சிறுகதைப் போட்டி

தம்பி, தங்கைகளே! உங்களிற் பலர் அழகான சிறுகதைகளை எமக்கு அனுப்பி வைத்திருக்கின்றீர்கள். அவற்றுட் பல மிக நன்ருயிருக்கின்றன. 'புனிதவீரர்' பக்கத்தில் உங்களுக்கு ஊக்கமூட்டும்படி 'சிறுகதைப் போட்டி' ஒன்றை ஆரம்பித்துள்ளோம். நீங்கள் அனைவரும் போட்டியில் பங்குபெற வேண்டும் என்பதே எமது அவா. யார் 'நத்தால்பரிசு' பெறும் அதிர்ஷ்டசாலி என்றுதான் பார்ப்போம்.

**போட்டி விதிகள்:**

1. மாணவ - மாணவிகள் மாத்திரம் இப்போட்டியிற் கலந்துகொள்ளலாம்.
2. கதைள் நத்தால்திருநாளுடன் சம்பந்தப்பட்டதாயும், கொப்பி ஒற்றையில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமலும், தாளின் **ஒருபக்கத்தில் மாத்திரம்** எழுதப்பட்டதாயும் இருக்கவேண்டும்.
3. கதைகள் பாடசாலைத் தலைமை ஆசிரியரின் ஒப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும்.
4. கதைகள் அனுப்பும்போது கீழ்க்காணப்படும் **முகவரியை வெட்டி** மேலுறையில் ஒட்டி அனுப்பவேண்டும்.
5. ஆண்களுக்கு ஒரு பரிசும் பெண்களுக்கு ஒரு பரிசும் வழங்கப்படும்.
6. கதைகள் 30-11-59-க்கு முன் அனுப்பப்பட வேண்டும். இத் திகதியின்பின் வரும் கதைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**கதைகள் சேரவேண்டிய முகவரி:**

"நத்தால் சிறுகதைப் போட்டி",
புனித அன்னுள் கோவில்,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

இதை வெட்டி மேலுறையில் ஒட்டி அனுப்ப மறக்கவேண்டாம்.

# மாதாவுக்குச் சூட்டிய மகத்தான பாமாலை

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பையன்கள் நகைத்தார்கள்.

வறியபிரான்ஸும், அவன் சகோதரர் இருவரும் சபாமண்டபத்திலே கடைசி ஆசனவரிசையில் அமர்ந்திருந்தார்கள்.

"நீ இங்குவரா நினையாதிருந்தால் நன்றாயிருந்திருக்குமென நான் எண்ணுகிறேன்" என்றான் பிரான்ஸின் மூத்த தமையன். அதற்குப் பிரான்ஸ் பதிலளிக்கவில்லை. முன்போலவே அமைதியாக அமர்ந்திருந்தான்.

"ஓ, தேவ அன்னையே, தெரிவுப் பரீட்சையில் சித்தியடைய எனக்குத் துணைச்செய்வீரானால் நான் ஓர்நாள் உமக்குமகிமையாக அலங்காரமான ஓர்கீதத்தை இயற்றுவேனென வாக்களிக்கிறேன்" என்று மவுனமாக வேண்டிக்கொண்டான் பிரான்ஸ்.

ஒருவர்பின்ஒருவராகப் பையன்கள் அழைக்கப்பெற்றுக் கேள்விகள் கேட்கப்பட்டபின் தங்கள்ஆசனங்களுக்குத் திரும்பஅனுப்பிவைக்கப் பட்டார்கள். கடைசியாகப் பிரான்ஸின் முறை வந்தது. அவன்எழுந்தபோது ஏனைய பையன்கள் மீண்டுமோர்தரம் அவனை நகைக்கத் தொடங்கினார்கள்

"மகனே! இப்போது இந்தப்பத்திரத்திலுள்ள கீதத்தைப்படி" என்று பரிவாகக்கூறினார் பரீட்சைக்குத் தலைமைதாங்கிய சந்நியாசியார். அச்சிடப்பெற்ற சுரங்களைக் கொண்ட அப்பத்திரத்தைப் பிரான்ஸ் வாங்கினான். தனது கண்டத்தைத் தெளிவாக்கினான். அவன் பாடத் தொடங்கியதே ஏனைய பையன்கள் பரிகாசஞ்செய்து கூச்சல்போட்டார்கள். ஆனால், ஒருகணநேரத்தில் தங்கள்கூச்சலை அவர்கள் நிற்பாட்டினார்கள்.

பிரான்ஸ் பாடிமுடிந்ததும் "பரிசாரகனே! மாட்சிமைதங்கிய சக்கிரவர்த்தியின் 'யூனிபோம்' உடையை மாஸ்றர் பிரான்ஸ் ஸ்கூபேட்டுக்குக் கொண்டுவா; ஏனெனில், இந்தக்கலாசாலையில் ஓர்மாணவனாக அவன் அனுமதிக்கப்பட்டிருக்கிறான்" என்று சந்நியாசியார் மொழிந்தார்.

சக்கிரவர்த்தியின் கலாசாலைக்குரிய பொற்சித்திரப் பின்னற்கரையைக் கொண்ட 'யூனிபோம்' உடையில் பிரான்ஸைக்கண்டதே தங்களுக்குண்டான ஆனந்தத்தையும், பெருமையையும் அடக்கிக்கொள்ளமுடியாது சந்தோஷக்கண்ணீர்உகுத்து, சூழநின்றவர்கள் ஒவ்வொருவரையும்விழித்து, "அங்கேநிற்கிறவர் எங்களுடையதம்பிதான்" என்றுகூறினார்கள் தமையன்மார்இருவரும்.

பிரான்ஸ் பீற்றர் ஸ்கூபேட் கலாசாலையில்சேர்ந்து சங்கீதம்இயற்றப் பயின்றுகொண்டவாலாறு இதுவாகும். இவரால்தான் நாம் இன்று உலகின் மகா அலங்காரமான கீதங்களில்ஒன்றை—அதாவது, "ஆவேமரியா அல்லது மரியாயே வாழ்க" என்னும் கீதத்தைக் கொண்டிருக்கிறோம். ஏனெனில், தேவஅன்னையை மகிமைப்படுத்துவதற்கென இயற்றுவதாகப் பிரான்ஸ் வாக்களித்தகீதம் இந்த "ஆவேமரியா" தான்.

அநேகபெரிய சங்கீதவித்துவான்கள் "ஆவேமரியா அல்லது மரியாயே வாழ்க" என்பதை அமைத்து எத்தனையோ வாழ்த்துக்கீதங்களை ஆக்கியிருக்கின்றார்கள். ஆனால், அவற்றிலெல்லாம் அதிகம்மனோகரமான ஒருகீதம் பிரான்ஸ் பீற்றர் ஸ்கூபேட்என்பவரால் ஆக்கப்பட்டுள்ளது. இந்தக்கீதத்தைச் சிலவேளை வானொலியிலும் நீங்கள் பாடக்கேட்டிருக்கலாம். இற்றைக்கு 182வருடங்களுக்குமுன் 1797-ம் ஆண்டு இவர் வீயன்னாநகரில் பிறந்தார். 13வயதுடையவராய் இருக்கும்போதே இவர் கீதங்கள்இயற்றத் தொடங்கினார். தமதுசீவியகாலத்திலே இவர் 600கீதங்களுக்குமேல் இயற்றியிருக்கின்றார். இவற்றில் அநேகம் உலகிலேயே மகாஅலங்காரமானகீதங்களிடையே உந்நதஸ்தானத்தை வகித்திருக்கின்றன.



திரு. சி.பிரான்சீஸ் (பொன்னு)
அவர்களின்

## தேகவியோகம்

யாழ்நகர்வாசரும், இற்றைக்கு ஏறக்குறைய நாற்பதுவருடங்களாக யாழ்ப்பாண மேற்றிராசனமாளிகையில் கண்ணியமாய்க்கடனாற்றிப் பலராலும் நன்கறியப் பெற்றவருமான திரு. சின்னையா பிரான்சிஸ் (பொன்னு) அவர்கள் எதிர்பாராவிதமாக ஏற்பட்ட இருதயநோயால் ஐப்பசித்திங்கள் 29-ம்நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3–30மணியளவில் காலமாயினார். மரிக்கும்போது இவருக்கு வயது 54. இவருக்குப் புத்திரர் மூவரும், புத்திரிகள் இருவருமுளர்.

மறுநாள் வெள்ளிக்கிழமையன்று சாயந்தரம் வண. குருப்பிரசாதிகள் பலரும், இனசனர், அன்பர்களும் புடைசூழ இவரதுசடலம் ஊர்வலமாக ஆசனக்கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவரவர்கள் அந்திமசடங்குகள் நிறைவேற்றி ஆசீர்வதித்தார். ஈற்றில் அதிவண. ஜே. புரோகான் சுவாமியவர்கள் சேமக்காலையில் கடைசி ஆசீர்வாதம் அருளிநிற்க, கவலைப்பிரதாபத்துடன் பூமதானம் செய்யப்பட்டது. இவரை இழந்து மீளாத் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். இவரின்ஆன்மா நித்திய சாந்தி அடைவதாக.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

In the matter of the Last Will and Testament No. 651. Ty. of Mangaiyatkarasi wife of V. Vinayagamoorthy of Valvettiturai.

—Petitioner.


This matter coming on for disposal before S. ThambyDurai Esquire District Judge of Point Pedro on the 13th day of October 1959 in the Presence of Mr. A. N. Velayutham proctor on the part of the Petitioner and the petition and affidavit of the petitioner having been read.

It is ordered that the Petitioner as husband of the deceased be declared entitled to obtain Probate to the estate of the deceased and such Probate be issued to him unless any person shall appear before this Court on or before the 20th day of November 1959 and shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 13th day of October 1959.

(Sgd.) S THAMBYDURAI,
District Judge.

Drawn by:
(Sgd.) A. N. VELAYUTHAM,
Proctor for Petitioner.



## அமரதின நினைவு

### 2-வது ஆண்டு நிறைவுஞாபகம்

தோற்றம்: 6-12-35  மறைவு: 24-11-57

எங்களை விட்டுப்பிரிந்தும் எங்கள் நினைவைவிட்டு என்றென்றும் அகலாத என் அருமைமகனும், எங்கள்நேசச்சகோதரனுமாகிய நீக்கலஸ் சூசைதாசன் அவர்கள் காலமான 2-ம்வருட ஞாபகதினம் நிகழும் கார்த்திகைத்திங்கள் 24-ந்திகதி வருகின்றது. அன்றுதினம் பாஷையூர் அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

இதைக்கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், இனசனநண்பர்கள், மற்றும்யாவரும் அன்று இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி பரிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால்வருந்தும்
தாய்: மிசிஸ்ஜே. ஞானப்பிரகாசம்.
மைத்துனர்: எம். அன்ரனிப்பிள்ளை, பி. ஏ.
சகோதரர்: மிசிஸ்எம். அன்ரனிப்பிள்ளை.
சங். சிஸ்றர் மேரிலொறின்டா, ஏ. சி.
ஜி. எம். ஆர். யேசுதாசன்
சங். விக்ரர் ஞானப்பிரகாசம், ஓ. எம். ஐ.
மேரி கெலன்றீசா.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2610**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு பக்கீர் மொகமெட் சுல்தான்
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு பிச்சைக்குள ஒழுங்கை

1. கச்சு மொகமெட் மொகமெட் சுல்தானும்,
2. மனைவி மீராம்மாவும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2610-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1959ஆல் டிசம்பர் (மார்கழி)மீ 19உ சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 396-ம் மேலும்ரூபா 275-க்கு 22-12-58 திகதி தொடக்கம், 20-8-59திகதி வரைக்கும் வருடமொன்றுக்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 170ரூபா 55சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை "பிச்சைக்குளம் கரை" நிலப்பரப்பு 2, குளிகள் 5-உம், கிணறும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதில் அரைவாசி தெற்குப்பகுதியாக நிந்தமாக்கபபட்ட நிலப்பரப்பு 1-உம், குளிகள் 2½யும், அதனுள்இருக்கும் கட்டடமும். இந்த நிலப்பரப்பு 1-உம், குளிகள் 2½-க்கும் எல்லை: கிழக்கு — மொகமெட் மௌலிம்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம். வடக்கு: மொகமெட் சுல்தான் மொகமெட் மீரூப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — அசனுமரிக்கார் சேகுமொகிதீனுக்கும், மனைவி சுல்தான் மொகிதீன் நாச்சியாவுக்கும் உரியஆதனம்.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை. 6-11-59

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபைமாதாந்தக்கூட்டம் இம்மாதம் 28-ம்தேதி சனிவாரம் பி. ப. 4-00 மணிக்கு நடந்தேறும். அச்சமயம் ஆறுசகோதரிகள் தங்கள் நவாப்பியாசகாலத்தை முடித்துவாக்குத்தத்தம் எடுப்பார்கள். இது ஓர்ஆடம்பரமானகூட்டமாயிருப்பதால் சகோதரர் எல்லோரும் தமதுசபை உடையணியவேண்டும். ஆகவே, அவைகளைத்தப்பாது கொண்டுவருமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுக்கூட்டத்தின்பின் பகுதித்தலைவர்கள் சங்கம்நடைபெறும்.

A. S. Francis OF Mary,
சபைக்கர்த்தருக்காக

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதயஇரக்கத்தினாலும், பரி. சதாசகாயமாதாவின் மன்றாட்டினாலும் எனதுகணவரின் காலில்உண்டான வருத்தம் சீக்கிரம்குணமடைந்தது. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

மருதங்குளம் ஏ. சீ.

## சென் வின்சென்ற் டீ போல் தருமசபை

அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபைப்பந்திகளின் 3-ம்கால்வருடக் கூட்டம் இம்மாதம் 29-ம்தேதி ஞாயிறுவாரம் பி. ப. 5-30மணியளவில் நாவாந்துறை பரலோகமாதா பந்திச்சாலையில் அவ்வூரின் கட்டளைக்குரவராகிய வண. சாவேச்சுவாமியாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தேறும். அவ்வமயம் ஆசனக்கோவில் உதவிக்கட்டளைக்குரவராகிய வண. செல்வராஜாசுவாமியாரவர்கள் உபந்நியாசம் நிகழ்த்துவார். எல்லாப்பந்திகளின் அங்கத்தவர்களும் தவறாதுசமுகங்கொடுப்பார்களென நம்பியிருக்கிறோம்.

A. S. FRANCIS OF MARY,
தனிச்சங்க காரியதரிசி.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

1949ம் ஆண்டு தொட்டு நான் ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்று சதா சகாய மாதாவிடம் தினமும் மன்றாடிவந்தேன். எனது மன்றாட்டுக் கேட்கப் படாததால் மனமுடைந்து, மேலும் விடாப்பிடியாக மன்றாடிக் கடைசி முறையாக இம்முறை என் மன்றாட்டம் வீண்போகவில்லை. பரீட்சையிற் சித்தி பெற்றேன். தாயின் நாமம் எங்கும் என்றும் புகழப்படுவதாக.

மாதாவின் அடியாள்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 19-1959.